# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்




மத்திய அரசு மருந்து நிறுவனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து
காஞ்சிபுரம் மாவட்டம் மேலேரிப்பாக்கம் ஊராட்சியில் மறியலில் ஈடுபட்டுள்ள
கிராம மக்களை போலீசார் சூழ்ந்துள்ளனர்

FOCUS

# தள்ளாடுகின்ற தலைசிறந்த திட்டம்

– டி. கே. ராஜலட்சுமி

**ஐக்கிய முற்கோக்குக் கூட்டணி அரசாங்கத்தின் முக்கியமான வறுமை ஒழிப்பு திட்டமாக கிராமப்புற வேலை உறுதி திட்டம் இருக்கிறது. அதை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் செயல்பாட்டு ரீதியான குறைபாடுகள் இருப்பதை இந்திய தலைமை தணிக்கையாளர் காண்கிறார்.**

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதலாவது அரசாங்கத்தின் முன்முயற்சியாய் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதித் திட்டம் ஒதுக்கப்பட்டது. அதன் செயல்பாடுகளை பற்றி இந்திய தலைமை தணிக்கையாளரின் அலுவலகம் நடத்திய ஒரு தணிக்கையால் இந்த திட்டம் கவனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் மிக முக்கியமான திட்டமாக கவர்ச்சியானதாக,ஒட்டுக்களை பெற்று தரக்கூடியதாக கருதப்பட்டது. கிராமப்புற ஏழைகளுக்கு ஒரு வருடத்தில் குறைந்த பட்சம் நூறு நாட்களுக்காவது கூலி உழைப்பு அடிப்படையிலான வேலை தருவது இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். ஆனால் அதை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் மிக கடுமையான அமைப்பு ரீதியான குறைபாடுகள் இருப்பதையும் அவற்றை சரி செய்வதில் அரசாங்கத்துக்கு கடமை இருப்பதையும் அந்த தணிக்கை சுட்டி காட்டுகிறது. கிராமப்புற ஏழைமக்களில் மிகவும் நலிவடைந்த பிரிவினரை நோக்கி இந்த திட்டம் குறிப்பாக இருப்பதால், அதில் வேலை தருவதில் மனித வேலை நாட்கள் குறைந்து வருவது என்பது மிக முக்கியமாக மத்திய அரசாங்கத்தை கவலைப்பட வைக்கும். இந்த திட்டத்தை மதிப்பீடு செய்த இந்த தலைமை தணிக்கையாளரின் அறிக்கை அதன் அளவுக்கு நியாயப்படுத்தக்கூடியதாகவும் விமர்சன பூர்வமாகவும் இருந்திருக்கிறது.

இந்த திட்டம் எப்படி செயல்பட்டுள்ளது என்பதை பற்றிய இரண்டாவது அறிக்கையின் மீது தனது மதிப்பீட்டை இந்திய தலைமை தணிக்கையாளரின் அலுவலகம் வைத்துள்ளது. முதலாவது அறிக்கை 2007-08 ல் தயாராகி உள்ளது. 2006 பிப்ரவரி முதல் மார்ச் 2007 வரையிலான காலத்தை அது ஆய்வு செய்துள்ளது. இந்த திட்டத்துக்கான பொறுப்பு அமைச்சகமாக (nodal Ministry) கிராமப்புற மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சகம் உள்ளது. உண்மையில் அந்த அமைச்சகம் தான், ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2012 வரையிலான காலகட்டத்தை தணிக்கை செய்து தருமாறு இந்திய தலைமை தணிக்கையாளர் அலுவலகத்தை கேட்டுக்கொண்டது. 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் 458 வட்டாரங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் இருந்து 3848 கிராமங்களையும் ஆய்வுக்கான களமாக எடுத்துக் கொண்டுள்ளனர். அவற்றில் இந்த திட்டம் அமலான விதம் ஆய்வு செய்யப்பட்டது. இந்த திட்டம் 2006 பிப்ரவரியில் துவக்கப்பட்ட போது ஆரம்பத்தில் 200 மாவட்டங்களில் துவக்கப்பட்டது. பிறகு 2008 ஏப்ரல் 1 க்குள்ளாக அனைத்து கிராமப்புற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது.

சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் இந்திய தலைமை தணிக்கையாளரின் முந்திய தணிக்கை அறிக்கையில் எழுப்பப்பட்டு இருந்த அனேக விஷயங்கள் – தாமதமாக கூலி தருவது, வேலைக்கான அட்டைகளில் மோசடிகள், கிராம பஞ்சாயத்து மற்றும் வட்டார அளவில் கிராம் ரோஜர் சேவக்குகள் போன்ற பணியாட்களை நியமிக்காத நிலை ஆகியவை–இன்னமும் நீடிப்பதாகவே இருந்தது,

## குறைந்து கொண்டே வரும் செலவு

மத்திய அரசின் இந்த திட்டத்துக்கான செலவு அதிகரித்துக் கொண்டே செல்லும் பொதுவான எதிர்பார்ப்புக்கு மாறாக, கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வொரு மாவட்டத்துக்கான சராசரி செலவு குறைந்து விட்டதை (ஏறத்தாழ 2007–08 வருடத்தின் அளவுக்கு) இந்திய தலைமை தணிக்கையாளர் அலுவலக அறிக்கை காட்டுகிறது. ஒரு மனித வேலை நாளுக்கான செலவு அதிகரித்து கொண்டே போகிறது. அதே நேரத்தில் கிராமப்புற குடும்பத்துக்கான மனித வேலை நாட்கள் தொடர்ந்து குறைந்து கொண்டே போகிறது. இந்த திட்டத்தில் கவலை தரக்கூடிய விஷயம் என்ன வென்றால் தலித்துகள், பெண்கள், பழங்குடிகள் ஆகியோரின் ஒட்டுமொத்த பங்கேற்புமே ஐம்பது சதவீதத்தும் குறைவாக வருகிறது. தலித்துகள், பழங்குடிகள் இந்த திட்டத்தில் பங்கேற்பது குறைந்து வருவது என்பது மிக வெளிப்படையாக தெரிகிறது. அதிலும் பழங்குடிகள் பங்கேற்பு என்பது 2007–08ம் ஆண்டில் 29 சதவீதமாக இருந்தது. ஆனால் 2011–12ல் இதுவே 19 சதவீதமாக குறைந்தது. திட்டப்பணிகள் செய்வதற்காக எடுத்துக்கொள்பவை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே

செல்கின்றன. ஆனால் 2011–12ல் செய்து முடிக்கப்பட்ட பணிகளை அதற்கு முந்திய ஆண்டில் முடிக்கப்பட்டதோடு ஒப்பிட்டு பார்த்தால் 28 சதவீதம் குறைந்துள்ளன. 2011–12ல் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தப்பணிகளில் 22.5 சதவீதம் மட்டும்தான் செய்து முடிக்கப்பட்ட பணிகள் என்பது மேலும் முக்கியமானது.மனித வேலைநாட்கள் குறைவது, கூலி மற்றும் வேலைக்கான பொருள்களுக்கான 60:40என இருக்கவேண்டியதை கடைபிடிக்காமல் இருப்பது ஆகியவை ஒரு குடும்பத்துக்கான வேலைவாய்ப்புகளை குறைப்பதில் அதிக பங்காற்றி இருக்கலாம். "பஞ்சாயத்து, வட்டாரம், மாவட்ட மட்டங்களில் தேவையானபடி தேர்வு செய்து கொள்ளலாம் என நடைமுறையை உருவாக்கி கொண்டதன் மூலம் கிராமப்புற மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சகம் சட்டப்படியான 60:40 விகிதத்தை மீறியது.

12 மாநிலங்களிலும் ஒரு யூனியன் பிரதேசத்திலும் நடத்தப்பட்ட தலைமை தணிக்கையாளரின் ஆய்வின்படி, மேலே சொன்ன விகிதாச்சாரத்தை கடைப்பிடிக்காததால் இந்த தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் மட்டும் 15.03 கோடி மனித வேலை நாட்கள் குறைந்து விட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டம் உடல் உழைப்பை மையப்படுத்தி இருப்பதாலும் வேலைக்கு தேவையான பொருள் என்பது திட்டத்தின் மொத்தச்செலவில் நாற்பது சதவீதத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் 12 மாநிலங்கள் ஒரு யூனியன் பிரதேசத்தில் இத்தகைய விதிமுறை மீறப்பட்டது. அத்தகைய இடங்களில் பரிந்ததுரை செய்யப்பட்ட அளவுக்கு மேல் செலவு செய்யப்பட்ட இடங்களில் 1594.37 கோடிகள் வரை கூலி தருவதற்காக செலவு செய்ய வேண்டியதை குறைத்து செலவழித்து இருப்பதாக தலைமை தணிக்கையாளரின் அலுவலகத்தின் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். மத்திய அமைச்சகம் இந்த 60:40 சதவீதத்தை கடைபிடிப்பதில் கறாராக இருந்திருக்க வேண்டும் என அவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். 60:40சதவீதத்துக்கு அதிகமாக செலவான இடங்களை நல்லவிதமாக மாற்றுமாறு அது மாநில அரசாங்கங்களை கேட்டுக்கொண்டது. மாதிரி என்பது விரிவானதாக இருப்பதால் எண்ணிக்கை என்பது கூடுதலாக இருக்கும் என்பது தெளிவு. குடும்பத்துக்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பதும் எடுத்துக்கொண்ட பணிகளை நிறைவு செய்வதும் குறைந்து வருவதானது இந்த திடடத்துக்கான பிரதான நோக்கத்தை சாதிப்பதில் ஒரு மோசமான போக்கை சுட்டிக்காட்டுகிறது. உதாரணமாக, வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சொத்துக்களை உருவாக்குவதில் மோசமான போக்கு இருப்பதை கூறலாம்.வேலைவாய்ப்பு உருவாக்கம் குறைந்து இருப்பது என்பது பருவமழை பெய்ததாலும், கிராமப்புறங்களில் வேறுவித வேலைவாய்ப்புகள் உருவானதாலும் ஏற்பட்டது என்று அமைச்சகம் வாதிட்டது. அதனை ஏற்றுக்கொள்ள தலைமை தணிக்கையாளர் அலுவலகம் மறுத்து விட்டது. பருவ மழை என்பது சாதாரணமாக நடைபெறக்கூடியதுதான். அதற்கேற்றாற் போல திட்டங்கள் உருவாக்கப்பட்டு இருக்க வேண்டும் என அது கூறியது. சில மாநிலங்களில் திட்டமிடப்பட்ட வேலைவாய்ப்புகளுக்கும் உண்மையில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளுக்கும் இடையே 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வேறுபாடு இருந்தது. பீகாரில் 27 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை வேறுபாடு இருந்தது,

## வேலைக்கான அடையாள அட்டைகளில் குளறுபடிகள்

எல்லோரும் வேலை செய்ய முன்வரக்கூடிய ஒரு திட்டத்தில் வேலைக்கான அடையாள அட்டைகள் 12,455 குடும்பங்களுக்கு ஆறு மாநிலங்களில் தரப்படவில்லை. ஏழு மாநிலங்களில் வேலைக்கான அடையாள அட்டைகளில் போட்டோக்கள் ஒட்டப்படவில்லை. 14 மாநிலங்களில் 36.97 கோடி ரூபாய் அளவுக்கு குறைவான கூலி தரப்பட்டுள்ளது என அறியப்பட்டுள்ளது. கூலி குறைவாக தரப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. அவற்றுக்கு நட்ட ஈடும் தரப்படவில்லை. மண்சாலைகள் அமைத்தல், கச்சா சாலைகள், சிமெண்ட் சாலைகள் அமைத்தல், கால்நடைகளுக்காக உயர்த்தப்பட்ட பிளாட்பாரங்களை கட்டுதல் ஆகியவை உள்ளிட்ட இந்த திட்டத்தின் கீழ் செய்யக்கூடாத வேலைகள் 2252.43 கோடிகள் மதிப்பளவுக்கு எடுத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த சட்டம் 2006–12 காலகட்ட பகுதியில் அமலான விதத்தை பற்றி மத்திய கிராமப்புற மேம்பாட்டுக்கான அமைச்சகத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்புக்கு தலைமை தணிக்கையாளரின் ஆய்வு விபரங்களும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உதவி உள்ளன. அவை கடந்த வருடத்தில் வெளியிடப்பட்டன. ஆனால் வேலைவாய்ப்புகள் குறைந்துவிட்டதால் நலிவடைந்த மக்கள் பிரிவினர் பாதிக்கப்படுவதை பற்றிய விபரங்கள் அமைச்சகத்தின் மதிப்பீடுகளில் இல்லை. மொத்தத்தில் தலைமை தணிக்கையாளரின் அறிக்கையும் அமைச்சகத்தின் சொந்த செயல்பாடுகளைப்பற்றிய அதனது அறிக்கையும் இந்த திட்டத்தை கறாராக அமலாக்குவதிலும் அதில் உள்ள குறைபாடுகளை நீக்குவதிலும் ஒரு அவசரம் தேவையாக இருக்கிறது என்பதை காட்டுகிறது.

மத்திய அளவிலான வேலைவாய்ப்பு உறுதி கவுன்சில் கடந்த ஆறு வருடங்களாக இருந்தாலும் மத்திய அளவிலான கண்காணிப்பு திருப்திகரமாக இல்லை என

தலைமை தணிக்கையாளரின் அறிக்கை கூறுகிறது. கவுன்சில் உறுப்பினர்களால் ஆறு மாநிலங்களில் நடத்தப்பட்ட முன் தயாரிப்பு இல்லாத ஒரு வடிவத்தில் நடத்தப்பட்ட 13 கள ஆய்வுகள் மட்டும்தான் கண்காணிப்பு என்ற முறையில் செய்யப்படட ஒரே நடவடிக்கை என்று தலைமை தணிக்கையாளரின் அறிக்கை கூறுகிறது. இந்த ஆய்வுக்களுக்கு பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தொழில்நுட்பத்தையும், நிறைவேற்றப்படுகிற வேலைகளை பரிசீலிப்பதை யந்திரமயமாக்குவதையும் மிகவும் விரும்பக்கூடிய ஒரு நாட்டில் இவை இரண்டும் எல்லா பிரச்சனைக்குமான தீர்வாக தெரிகின்றன. ஆனால் இந்த திட்டத்துக்கான நிர்வாக தகவல் முறையில் ஏற்றப்பட்டுள்ள தகவல்களுக்கும் மாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் உள்ள அசல் தகவல்களுக்கும் இடையே வித்தியாசங்கள் இருப்பதை தலைமை தணிக்கையாளரின் ஆய்வுகள் கண்டுபிடித்தன. மோசடித்தனம் செய்வதற்காக தொழிற் நுட்பம் வளைக்கப்படுவதை இவை காட்டுகின்றன.

இந்த தகவல் திரட்டலில் தவறான தகவல்கள் மட்டும் தரப்படவில்லை. தொடர்ந்து தரவேண்டிய தகவல்களும் முறையாக இல்லாமல் ஆங்காங்கே விடுபட்டு இருந்தன என்பதற்கும் அனேக உதாரணங்கள் இருந்தன. இந்த திட்டத்தின் அன்றாட நடைமுறைகள் மற்றும் நிதி செயல்பாடுகளும் பற்றி நிர்வாகத்தரப்பு எடுத்து வைத்துள்ள தகவல்கள் நம்பகத்ததன்மையாகவை இல்லை என அந்த அறிக்கை கூறுகிறது. இந்த திட்டத்தின் அடிப்படையை மீறிய தவறுகள், காலம் தவறிய கட்டுப்பாடுகள், தகவல்களை அடிப்படை பதிவேடுகளுக்கு சம்மந்தம் இல்லாமல் திருத்தி இருப்பது ஆகியவையும் தலைமை தணிக்கையாளர் ஆய்வில் தெரிய வந்துள்ளது. அனைத்து மட்டங்களிலும் பணியாட்கள் பற்றாக்குறையாக இருப்பது திட்டத்தை நிறைவேற்றுவதை கடுமையாக பாதித்துள்ளது. இதற்கான மத்திய அமைச்சகத்தின் பொறுப்பை தலைமை தணிக்கையாளர் சுட்டிக்காட்டும்போது, இந்த விஷயத்தை நெருக்கமாக கண்காணித்து இருக்க வேண்டும். பணியாட்கள் பற்றாக்குறையை மாநில அரசாங்கங்கள் கணக்கில் எடுத்து இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். கடந்த இரண்டு வருடங்களாக கிராமப்புற குடும்பம் ஒவ்வொன்றுக்கும் கிடைத்து வந்த வேலைவாய்ப்புகள் 2009–10ல் 54 நாட்களில் இருந்து 2011–12ல் 43 நாட்களாக குறைந்து உள்ளன.2011–12 ல் நிறைவேற்றப்பட்ட பணிகளும் தொடர்ச்சியாக குறைந்து உள்ளன. இந்தியாவின் கிராமப்புற ஏழைகளில் 46 சதவீதத்தை கொண்டுள்ள பீகார், மகாராஷ்ட்ரா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்த திட்டத்தின் ஒதுக்கப்பட்ட நிதி 20 சதவீதம் மட்டும்தான் செலவழிக்கப்பட்டுள்ளது.இந்த திட்டத்துக்காக அனுமதிக்கப்பட்ட பணம் கணக்கில் வராமல் இருப்பதும் அதனை மத்திய அரசு கண்காணிப்பதில் தோல்வியடைந்து இருப்பதையும் பற்றிய கேள்விகள் கேட்கப்படுகின்றன.

## கூடுதல் நிதிகள்

மார்ச் 2011ல் மாநிலங்களுக்கு 1960.45 கோடிகளை விதிகளை தளர்த்தி மத்திய அமைச்சகம் அனுப்பியது நிதிப்பொறுப்பு சம்மந்தமான விதிமுறைகளுக்கு முரண்பாடானது என்று தலைமை தணிக்கையாளர் ஆய்வு குற்றம் சாட்டுகிறது. 2008–2012 காலகட்டத்திலும் மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி நிலை அறிக்கைகளின் பிரிவுகள் மற்றும் பொதுவான நிதி தொடர்பான விதிமுறைகளுக்கு முரணாக 4072.99 கோடிகளை விடுவித்தது. நிதி நிலை அறிக்கைகளின் விதிமுறைகளுக்கு முரணாக நிதிகளை விடுவிப்பதில் அரசுக்கு அவசரம் ஏன்? இதைப்போலவே, ஆறுமாநிலங்களுக்கு தவறான மதிப்பீடுகளாலோ, மாநில அரசுகளிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதை கணக்கில் கொள்ளாமலோ கூடுதலான நிதிகளை மத்திய அமைச்சகம் விடுவித்து உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் நிதிகளை விடுவித்தது தொடர்பானவை முன்னதாக தீர்மானிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை விட மாநிலங்களின் எதிர்பார்ப்பு வேண்டல்களின் அடிப்படையில் இருந்தன என்பதை அமைச்சகத்தின் நடைமுறை வழிகாட்டல்கள் தெளிவாக காட்டுகின்றன.

மாநிலங்கள் கேட்டுக் கொண்டதை விட பத்து சதவீதம் அதிகமான நிதியை அவர்கள் முன்னதாக தரப்பட்ட நிதியை பயன்படுத்தினார்களா என்பது தெரியாமலே ஒதுக்குவது, அவை கடந்த காலத்தில் செயல்பட்ட முறையை மதிப்பிடாமலே அனுப்புவது ஆகிய அமைச்சகத்தின் செயல்பாடுகள் பொருத்தமற்றதாக தோன்றுகிறது என்கிறது தலைமை தணிக்கையாளர் அறிக்கை. கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்ட து எல்லாம் காங்கிரஸ் ஆட்சி நடக்காத குஜராத், உத்திரப்பிரதேசம் ஒடிசா, மத்தியப்பிரதேசம் ஆகியவை என்பது சுவையான விஷயம் ஆகும். நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் மத்திய அரசின் நிதிகளை விடுவித்தது என்பது அதிகாரபூர்வமற்றதானது. நாடாளுமன்ற ஒப்புதல்கள் என்பவை குறிப்பிட்ட வருடத்துக்கானனவை மட்டுமே. பயன்படுத்தாத நிதிகளை அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு வைத்திருந்து பயன்படுத்த முடியாது என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் தரப்படுகிற கூலியை விட அதிகமான குறைந்தபட்ச கூலியை கொண்டு இருக்கிற அரியானாவில் இருக்கிற கூலி வித்தியாசத்தை அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வரும்போது அதனை ஏற்க மத்திய அரசு முன்வந்துள்ளது.

இந்த திட்டத்தை பலவீனப்படுத்த வேண்டும் அல்லது சில மாநில அரசாங்கங்கள் மேல் கெட்ட பெயர் ஏற்படுத்த

வேண்டும் என்ற உள்நோக்கத்தில்தான் தலைமை தணிக்கையாளர் இத்தகைய ஆய்வுகளை செய்யுமாறு கேட்டுக்கொண்டதாக சில வட்டாரங்கள் யூகிக்கின்றன. இந்த திட்டம் வறுமையை ஏதாவது ஒரு அளவுக்காவது ஒழித்துள்ளதா என அறிக்கை கேட்டுள்ளது.மொத்த திட்டத்தின் வெற்றியை பற்றியும், இந்த வருடம் வர உள்ள சட்டமன்ற தேர்தல்களிலும் அடுத்த வருடம் வர உள்ள நாடாளுமன்ற தேர்தல்களிலும் இந்த திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக அரசு பிரச்சாரம் செய்ய உள்ளதா எனவும் அது கேள்விகள் எழுப்பியுள்ளது. திட்டத்தை நிறைவேற்றுவதில் பல பின்னடைவுகள்,நிதிகள் இல்லாமல் போய்விடுவது மோசமான கண்காணிப்பு ஆகியவை இருந்தாலும் தனிநபர் வருமானம் அதிகமுள்ள மாநிலங்களில் கூட இந்த திட்டத்தை விரும்பி கோருவது என்பது அதிகமாக இருக்கிறது.அரியானா மாதிரி உள்ள மாநிலங்களில் கூட இந்த திட்டம் விரும்பப்படுகிறது. அரியானாவில் விவசாய தொழிலாளர்களின் திட்டமிட்ட செயல்பாடுகளாலும் அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளாலும் சில மாவட்டங்களில் இந்த திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

கிராம பஞ்சாயத்துகள் ஜனநாயகத்தின் அடித்தளம்.11 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் கிராம சபாக்களின் பரிந்துரைகளின் பேரில் வருடாந்திர வளர்ச்சி திட்டங்களை தயாரிக்க அவற்றுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளன. இந்த திட்டத்தில் அவை எதுவும் பெரிதாக சாதிக்கவில்லை. கிராம பஞ்சாயத்துகளை பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதில் கடுமையான விஷயம் என்னவென்றால் ரூபாய் 1,26,961.11 கோடிகள் மதிப்புள்ள 129.22 லட்சம் பணிகள் வளர்ச்சி திட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளன என்றால் ரூபாய் 27,792.13 கோடிகள் மதிப்புள்ள வெறும் முப்பது சதவீத பணிகள் மட்டுமே இந்த தணிக்கைக் குட்படுத்தப்பட்ட காலகட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளன. தலைமை தணிக்கையாளர் இதனை திட்டத்தை அமலாக்குவதில் உள்ள திறமை இல்லாமையாக பார்த்தாலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியில் மீதமுள்ளவை எங்கே போய்விட்டது என்பதை அது குறிப்பி வில்லை. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பஞ்சாயத்துகளில் 18 முதல் 54 சதவீதம் வரையானவை சரியில்லாத மற்றும் பராமரிக்கப்படாத அடிப்படையான பதிவேடுகளை வைத்துள்ளனர். ஒரு முறையான பரிசோதனைக்கு அது தடையாக இருக்கிறது.

இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சட்டம் இயற்றப்பட்டு ஏழு வருடங்களாகிவிட்டது. காங்கிரஸ் ஆளும் இரண்டு மாநிலங்கள் உள்ளிட்ட நான்கு மாநிலங்கள் கூட மார்ச் 2012 வரைக்கும் கூட இந்த சட்டத்துக்கான விதிகளை உருவாக்க வில்லை. வேலைவாய்ப்புக்கான கோரிக்கைகளை உருவாக்குவதற்காக இந்த திட்டத்தின் கீழ் விளம்பரம் செய்வதும் போதுமானதாக இல்லை.

12 மாநிலங்களில் தகவல் ,கல்வி மற்றும் தகவல் தொடர்பு திட்டங்கள் வடிவமைக்கப்படவில்லை. IEC நிதிகள் பயன்படுத்தப்பட வில்லை. இந்த திட்டத்தின் பயனாளிகள் இடையே உள்ள விழிப்புணர்வு மட்டத்தை பாதிக்கக் கூடியவையயாக IEC செயல்பாடுகள் குறைவாக உள்ளன. அது பயனாளிகள் தங்கள்உரிமைகளை முழுமையாக அறிவதில் பாதிப்பை ஏற்படுத்தும் என கணிக்கிறது தலைமை தணிக்கையாளரின் அறிக்கை.

**ஆதாரம்: – பிரண்ட்லைன் ஜீன் 14 இதழ், 2013**

## மின் கட்டணம் செலுத்த வசதி : உள்ளாட்சிகளுக்கு கூடுதல் நிதி

மின் கட்டணம் செலுத்த ஊராட்சிகளுக்கு, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கடந்த ஓராண்டுக்கு முன், உள்ளாட்சிகள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு, கட்டணம் உயர்த்தப்பட்டது. அதன்படி, ஊராட்சிகளுக்கு, யூனிட்டுக்கு, 3 ரூபாயும், மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு யூனிட்டுக்கு, 3.30 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. மின் கட்டணம் செலுத்த, மாநில நிதிக்குழு மானியம் மற்றும் 13வது மாநில நிதிக்குழு மானியம் மூலம், உள்ளாட்சிகளுக்கு, நிதி வழங்கப்படுகிறது. இதில், அதிகபட்சமாக, 25 ஆயிரம் ரூபாய் வரை, மின் கட்டணம் செலுத்த அனுமதிக்கப்படுகிறது. இதில், 25 ஆயிரத்துக்கு மேல், மின் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பொதுநிதியில் இருந்து செலுத்த வழிவகை செய்யப்பட்டது. வருவாய் இல்லாத ஊராட்சிகள், கணக்கில் இருந்து, 25 ஆயிரத்தை மட்டும் பெற்று, மின் கட்டணத்தைச் செலுத்தி விட்டு, மீதி பணத்தைச் செலுத்தாமல் விட்டனர்.

இதற்கிடையே, கடந்த ஓராண்டுக்கு முன், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிக்கு, யூனிட்டுக்கு, 5.50 ரூபாய் என, மின் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. கட்டணம் உயர்ந்ததால், 25 ஆயிரம் ரூபாயைக் கொண்டு மின் கட்டணம் செலுத்த முடியவில்லை. இதனால், வருவாய் இல்லாத உள்ளாட்சி அமைப்புகள், கடும் நெருக்கடியைச் சந்தித்து, அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றன. அதையடுத்து, மாநில ஊரக வளர்ச்சித் துறை சார்பில் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, மின் கட்டண ஒதுக்கீடு, 40 ஆயிரம் ரூபாயாக ஒதுக்கப்பட்டு உள்ளது. ஊராட்சிகளில் மின் கம்பம் அமைத்து, மின் விளக்கு எரியவிட, டியூப் லைட்டுக்கு, 9 ஆயிரத்து 500 ரூபாயில் இருந்து, 13 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. அதேபோல், சோடியம் மின் விளக்குடன், மின் கம்பம் அமைக்க, 13 ஆயிரத்து 130 ரூபாயில் இருந்து, 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது. இந்த உத்தரவு, கடந்த ஜுலை, 28ம் தேதி முதல், நடைமுறைக்கு வந்து உள்ளது.

**ஆதாரம்: தினகரன், 5.8.2013**

# தாக்குப்பிடித்து நிற்பதன் பிரச்சனை

– டி.கே. ராஜலட்சுமி

**மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் மீது எதிர்மறை கணிப்புகளும் விமர்சனங்களும் இருந்தாலும் தனிநபர் வருமானம் அதிகமுள்ள மாநிலங்களில் கூட அது தொடர வேண்டும் என கேட்பது அதிகமாக இருக்கிறது –அரியானாவின் ஹிசார் மற்றும் பெடகாபாத்தில் இருந்து டி.கே.ராஜலட்சுமி**

மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் வேலை கோருவது என்பது பொதுவான கருத்துக்கு மாறாக அரியானாவில் அதிகமாக இருக்கிறது.

விவசாய செலவு மற்றும் விலைகளுக்கான இந்திய ஆணையம் ஏப்ரல் 2013ல் துவக்கிய ஒரு ஆய்வு குறிப்பு உள்ளிட்டு சமீபத்தில் வெளியான ஆய்வுக்குறிப்புகளின் பார்வைகளுக்கு மாறாக இருக்கிறது. கிராமப்புற வேலை உறுதி திட்டத்தாலும் விவசாயம் அல்லாத பணிகளிலும் வளர்ச்சி ஏற்படுவதன் காரணமாக விவசாய கூலிகள் உயருகின்றன என்று ஆணையத்தின் ஆய்வுக்குறிப்பில் இருக்கிறது. ஆனால் கிராமப்புற வேலை உறுதி திட்டத்திலோ அல்லது விவசாயம் இல்லாத துறைகளிலோ எதிலும் வேலை கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை நிலவரம்.

வேலை கிடைப்பது என்பது பெரும்பாலும் இரண்டு துறைகளைச் சார்ந்து உள்ளது. விவசாய தொழிலாளர்களும் அவர்களது சங்கங்களும் செய்கிற அமைப்புரீதியான முயற்சிகளின் விளைவாக ஏற்படுகிற வேலைவாய்ப்புக்கான கோரிக்கையை அது சார்ந்து உள்ளது. அந்த கோரிக்கைக்கு எதிர்வினையாக நிர்வாகம் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதையும் அது பொறுத்துள்ளது. சில விஷயங்களில் இந்த இரண்டும் சேர்ந்ததாகவும் இருக்கிறது.

தேசிய வேலை உறுதித்திட்டம் அதனுடைய திறன் எப்படிப்பட்டதாக இருக்கும் என்ற அடிப்படையில் இப்போது கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இந்த திட்டத்தை ஊழல் ஒரு கொள்ளை நோயைப் போல பல மட்டங்களில் அரித்தாலும் இந்த திட்டத்தை தொடர தேவையான அடிப்படையான சில காரணங்களை தலைமை தணிக்கையாளரின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தேசிய வேலை உறுதித் திட்டத்தின் காரணமாக விவசாயக்கூலிகள் உயர்ந்து இருப்பதாக அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநிலத்தலைவர் ராம் அவதார் சுல்ஷைனி நம்பிக்கை கொள்கிறார். ஹிசார் மாவட்டத்தில் இந்த திட்டத்தின் கீழ் ஒரே ஒரு பஞ்சாயத்தில் கூட வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்கிறார் அவர். இந்த திட்டத்துக்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை செய்த அரசு நிர்வாகம் இதற்கான முழுக்காரணம் அல்ல. பெரிய விவசாயிகள் மற்றும் நில உடமையாளர்களுக்கு இந்த திட்டம் பிடிக்காமல் இருப்பது பெருமளவு காரணமாக இருக்கிறது. உறுதியாக தரப்பட வேண்டிய நூறு நாள் வேலைக்கு பதிலாக கிராமப்புற குடும்பங்களுக்கு ஐம்பதுக்கும் குறைவான நாள்களே வேலை தரப்பட்டன என்றும் சுல்ஷைனி கூறுகிறார்.

“தலைமை தணிக்கையாளர் அறிக்கை சரியாகதான் சொல்கிறது. வேலை கிடைப்பது சிரமமாக உள்ளது. இதில் தலையிடுதல்கள் இருக்கின்றன. வேலைக்கான அட்டைகள் தொழிலாளர்களிடம் இருப்பதற்கு பதிலாக தலையிடுபவர்களிடம் இருக்கிறது. அல்லது பஞ்சாயத்து தலைவரிடம் இருக்கிறது என்கிறார் அவர்.

கூலியை தாமதமாக தருவதும் எங்கும் இருக்கிறது.வேலை கிடைப்பதற்கு மற்ற வாய்ப்புகள் இருப்பதால் இந்த திட்டத்தின் கீழ் வேலை கேட்பது குறைவாக இருக்கிறது என்ற கணிப்பு தவறானது என்கிறார் சுல்ஷைனி. பெரும்பாலான விவசாய வேலைகளை அறுவடை செய்பவர்களே செய்து முடித்து விடுவதுதான் பிரச்சனை. அதனால் உடல் உழைப்பு ரீதியான விவசாய வேலை என்பது வருடத்தில் சராசரியாக 40 நாட்கள் என குறைந்து விட்டது. வேலைக்கான வாய்ப்புகள் எல்லா இடத்திலுமே குறைவாகவே இருப்பதால் தேசிய வேலை உறுதி திட்டத்தை மக்கள் மிக அதிகமாக சார்ந்து இருக்கிறார்கள் என்கிறார்அவர். விவசாய ரீதியாக செழிப்பான ஹிசார் போன்ற மாவட்டங்களில் கூட இதுதான் நிலைமை.கூலி குறைவாக இருப்பதால் இந்த திட்டத்தின் கீழ் வேலை செய்வதை மக்கள் விரும்ப வில்லை என நம்புகிற பிரிவினர் அரசாங்கத்திலும் இருப்பதையும் இந்த திட்டத்துக்கு எதிரான ஒரு திட்டமிட்ட பிரச்சாரம் இருப்பதையும் அவர் உணர்கிறார்.

### சமூக பொருளாதார பங்கு

நிலம் படைத்தவர்களை சார்ந்து இருப்பது குறைந்தால் விவசாயத்தொழிலாளர்கள் மீது வன்முறைகள் நடப்பதும்

குறைகிறது. ஆனால் எந்த இடத்தில் வேலை இல்லையோ அந்த இடத்தில் ஒடுக்குமுறை கூடுதலாக இருக்கும். ரடாக் அருகே உள்ள மெதினாவுக்கு நாங்கள் போனோம். அங்கே ஏப்ரலில் இரண்டு தலித் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு இருந்தனர். ஏறத்தாழ 400 தலித் குடும்பங்கள் இங்கே இருக்கின்றன. அவர்களில் பெரும்பான்மையோர் நிலம்படைத்தவர்களை சார்ந்து இருக்கின்றனர். அந்த கிராமத்தில் வேலை உறுதி திட்டம் செயல்படவில்லை. ஹிசாரியில் இந்ததிட்டம் அமலாக்கப்படாமல் இருப்பதை விவசாயத்தொழிலாளர் சங்கம் பெரிய விசயமாக எடுத்துக்கொண்டுள்ளது. 2011–12லு ஏறத்தாழ 23 பஞ்சாயத்து தலைவர்கள் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டனர். 173 பஞ்சாயத்து தலைவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் விசாரணையில் உள்ளன. அவர்கள் மீது குற்றச்சாட்டு வந்ததும் 250 பஞ்சாயத்து தலைவர்கள் தங்களை சங்கமாக அமைத்துக்கொண்டு இந்த திட்டத்தை அமலாக்க மாட்டோம் என மறுத்தனர்.

வங்கிகள் கூட மோசடிகளில் ஈடுபடுகின்றன என்கிறார் சுல்ஷைனி. இந்த திட்டத்தின் கீழ் வேலை செய்த தொழிலாளி பெயரில் வங்கியில் போடப்படுகிற பணத்தில் கடன் என்ற முறையில் பணத்தை சில இடங்களில் வங்கிகள் குறைத்தன.நாங்கள் அது சட்டவிரோதமானது என்ற முறையில் அங்கே எல்லாம் தலையிட்டு அப்படி நடக்காமல் தடுக்க வேண்டி இருந்தது என்கிறார் அவர். கிராமத்தில் மேல்மட்ட தலைவர்களிடம் விவசாய தொழிலாளர்கள் மொத்தமாக சார்ந்து இருப்பது குறைந்து வருவது இந்த திட்டத்தின் நேரடியான பயன் ஆக இருக்கிறது. “வட்டிக்காரனையோ, அல்லது நிலத்தின் சொந்தக்காரயையோ நம்பி இராமல் எங்களின் குழந்தைகளுக்கு நல்ல சட்டைகள் வாங்கவும் அவர்களுக்கு பள்ளிக்கட்டணங்களை கட்டவும் எங்களால் முடிந்தது. இது பஞ்சாயத்துக்கும் தொழிலாளிக்கும் ஆன உறவாக இருக்கிறது.

தொழிலாளி இதை தனது உரிமையாக நினைக்கிறார்.அவர் அரசாங்கத்துக்கு உழைப்பதாக நம்புகிறார் என்கிறார் அவர். ஆனால் பஞ்சாயத்து தலைவர்கள் தொடர்ந்து கடுமையாகவே உள்ளனர். தலைமை தணிக்கையாளர் அறிக்கையில் இருப்பது போல ரோஜ்கார் சகாயக்குகள் அனேக இடங்களில் பணியமர்த்தப்பட வில்லை.பஞ்சாயத்து தலைவர்கள் அவர்களை பயனற்றவர்கள் என கருதுகிறார்கள். பெண்களுக்கு வேலை வேண்டாவெறுப்பாக தரப்படுகிறது, பெண் தொழிலாளிகளால் மண்வெட்டி பிடித்து வேலை செய்ய முடியாது என பஞ்சாயத்து தலைவர்களும் மேற்பார்வையாளர்களும் சொல்லி தங்களுக்கு வேலை தர மறுப்பதாக பிரண்ட்லைனிடம் அவர்கள் சொன்னார்கள். காம்லேஷ் எனும் பெண் அவளது கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து தலைவரை எப்போது கேட்டாலும் வேலை இல்லை என சொல்கிறார். தொழிலாளர்கள் எப்போது உட்கார்ந்து கூட்டம் பேசி போராட்டம் செய்யப்போவதாக மிரட்டினால் தான் அவர் அவர்களுக்ககான வேலை அட்டைகளை தயார் செய்கிறார். முன்பெல்லாம் ஒரு ஜமீன்தார் ஒரு தொழிலாளியை அவரது வயலுக்கு வேலைக்கு அழைத்தால் அவரால் மறுக்க முடியாது.

இன்று அதே ஜமீன்தார் அரசாங்கத்தின் திட்டத்தில் வேலைக்கு போகாதே எனது வயலுக் பருத்தி பிடுங்க வா என அழைக்கிறார், தொழிலாளிகள் பருத்தி பறிக்க கூடுதல் கூலி கேட்கிறார்கள் என்கிறார் அவர். வேலை அட்டைகளில் மோசடிகள் நடப்பது மிகவும் சாதாரணமாக நடக்கிறது. விவசாய தொழிலாளர் சங்கம் தலையிடுவதற்கு முன்னால் பணக்கார விவசாயிகளிடம் வேலை அட்டைகள் போய்விடும். அவர்கள் பஞ்சாயத்து தலைவர்களோடு மோசடியான கூட்டு வைத்துக்கொண்டு தொழிலாளிக்கு மொத்தமாக இரண்டாயிரம் தருவார்கள். எல்லா வேலையும் தொழிலாளி செய்வார். மிச்ச முள்ள பணம் விவசாயியின் பாக்கெட்டுக்குள் போய்விடும்.

தனிப்பட்ட முறையில் இந்த திட்டத்தை கண்காணிப்பதால் எப்படி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று காவல்துறை கூடுதல் துணை கண்காணிப்பாளர் அசோக் குமார் கார்க் விளக்குகிறார். விவசாயிகள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு இருந்ததாக அவர் கூறகிறார். விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடந்த போது பஞ்சாயத்து தலைவர்கள் வழக்கமாக எதிர்த்து கேட்டுள்ளனர். தொழிலாளர்களுக்கு அவர்களின் சட்ட உரிமைகள் பற்றி ஏன் சொல்லிக் கொடுக்கிறீர்கள்? அவர்களுக்கு ஏன் தைரியம் கொடுக்கிறீர்கள்? என்று கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இந்த திட்டம் வந்ததால் எல்லோரும் சோம்பேறி ஆகிவிட்டதாக ஒரு வாதம் வரும். ஒரு கிராம கூட்டத்தில் ஒரு விவசாயி பெண்களிடம் அவர்களால் என்ன வேலை செய்ய முடியும்? என கேட்டார். நாங்கள் சுடும் வெயிலில் மண்வெட்டி பிடித்து வெட்டுகிறோம் நீயும் எங்களோடு வருகிறாயா? என பெண்களில் ஒருவர் கேட்டார். இந்த திட்டத்தின் கீழான செலவு தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

2011–12ல் இந்த திட்டத்தில் மாவட்ட நிர்வாகம் 63கோடியை செலவு செய்தது. அடுத்த வருடம் அது 90கோடியானது. அது மாநிலத்திலேயே அதிகமான செலவு. இந்த மாவட்டத்தின் மக்கள் தொகையில் 22 சதவீதமானவர்கள் தலித்துகள். இந்த திட்டத்தின் வேலைக்கான அட்டைகளை வாங்கி இருப்பவர்களில் ஏறத்தாழ 76சதவீதம் பேர் தலித்துகள்.

## கிராமப்புற வேதனையும் கொள்கைகளின் ஓட்டையும்

கிராமப்புறங்களில் வேலை இல்லாத நிலை கட்டுக்கடங்காமல் இருக்கிறது. பிரண்ட் லைனிடம் பேசிய உள்ளூர் அதிகாரிகள் அதனை ஒப்புக்கொண்டனர். ஒரு வருடத்தில் எட்டு மாதங்களுக்காவது வேலை தர வேண்டும் என்ற கோரிக்கை இருப்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். அதே நேரத்தில் நிர்வாகத்தின் ஒரு பகுதியினர் மக்கள் வேலை வேண்டும் என கேட்பது போல எந்த தேவையும் இல்லை என நம்புகின்றனர். இந்த திட்டத்தின் கீழ் செய்யப்படுகிற வேலைகளுக்கு பஞ்சம் இருக்கிறது. இந்த திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படுகிற திட்டம் கூட இயந்திரங்களை வைத்து செய்யப்படுகிறது. சஞ்ஞார் மாவட்டத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். நிலம் படைத்தவர்கள் அங்கே வேலை இல்லை என்றார்கள். தோண்டுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தலாம் என்றார்கள். இந்த மாவட்டத்தில் உள்ள ஏழைக் குடும்பங்கள் வேலைக்காக டெல்லிக்கு இடம் பெயர்ந்து விட்டனர்.

‘‘அரியானா மாதிரி மாநிலத்திலேயே இந்த மாதிரி நிலைமை என்றால் மற்ற மாநிலங்களை பற்றி நினைத்து பாருங்கள். கிராமப்புற வளர்ச்சிக்கு முன்உதாரணமான மாநிலமாக காட்டிக்கொள்வது எல்லாம் சரியல்ல என்கிறார் ஒரு அதிகாரி.மத்திய அரசின் திட்டங்களும் சரிக்கு சமமான முறையில் குறைபாடு உள்ளவையாக உள்ளன. இந்த திட்டத்தின் கீழான பணிகளை அதிகப்படுத்துவதற்கு பதிலாக கால்வாய்களை தூர்வாருதலும், சுத்தம் செய்தலும் வேலைப்பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டுவிட்டது. இதை செய்ததும் ஒருபகுதி விவசாயிகள் பயனடைந்தனர். அவர்கள் முன்பு இந்த திட்டத்துக்கு எதிரானவர்களாக இருந்தனர் தற்போது எதிர்ப்பை கைவிட்டனர். இந்த வேலையை அனுமதிப்பதில் என்ன கெடுதி வந்து விடப்போகிறது ? கால்வாயை சுத்தம் செய்தால் தண்ணீர் கால்வாயின் கடைசிப்பகுதி வரை போய்விடுகிறது. குறைந்த பட்சம் வருடத்துக்கு இருமுறை கால்வாய் கள் சுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு தொடர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை இந்த திட்டத்தின் கீழ் செய்ய வேண்டாம் என முடிவு செய்துவிட்டனர். நமக்கு செய்யக்கூடிய திட்டங்கள் இல்லை. இதில் எந்த நியாயமான முறைமையும் இல்லை. பள்ளி விளையாட்டு மைதானங்களையும், அரசு பள்ளிகளில் நிலங்களையும் மேம்பாடு செய்தல் எல்லாம் இந்த திட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டிய வேலைகளில் இருந்து எடுக்கப்பட்டுவிட்டன. குடிநீருக்கான குழாய்கள் பதிப்பது அனுமதி இல்லை. பாசன தேவைகளுக்கான வேலைகள் அனுமதிக்கப்பட்டவை. ஆனால் மனிதர்களுக்கு குடிநீர் வழங்குகிற செயலுக்கு அனுமதி இல்லை.’’ என்கிறார் ஒரு அதிகாரி.

## பெடகா பாத்: வருடம் பூரா வேலை தேவை

அரியானாவில் உள்ள ஒரு மாவட்டம் பெடகாபாத். அதிக அளவு தலித்துகளும் நிலமற்ற மக்களும் உள்ளனர். இந்த பகுதி காக்கர் ஆற்றால் பாசனம் பெறுகிறது. நிறைய விளை நிலம் உள்ளது. வேலைக்கான உறுதித்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் வேறு எந்த பகுதியில் இருப்பதை விட வேலைக்கான கோரிக்கை இங்கே அதிகமாக இருக்கிறது. ஒரு ஏக்கரோ இரண்டு ஏக்கரோ வைத்துள்ள விவசாயிகள் கூட இந்த திட்டத்தின் கீழ் வேலைகேட்கிற நிலை உள்ளது. ஹிசார் மாவட்டத்தை போலவே தொழிலாளிகள் அவர்களுக்குள்ளாக அமைப்புரீதியாக திரண்ட உடனே இந்த திட்ட செலவு உயர்ந்து விடுகிறது. காங்கிரஸ் உள்ளிட்ட மற்ற அரசியல் கட்சிகளுக்கு இந்த வேலை உறுதி திட்டம் என்பது வீணானது எனும் நினைப்புதான் அதிகமாக இருக்கிறது என்கிறார் மார்க்சிஸ்ட் கட்சியின் ஜில்லாபரிஷத் உறுப்பினரான ராம்சந்தர். ‘‘நாங்கள் கடுமையாக போராடுகிறோம்.முதலில் வேலைக்காக.பிறகு கூலியை பெறுவதற்காக. எங்கு பார்த்தாலும் சாலை மறியல்தான்.வேலைக்கான முன்மொழிவுகளை அனுப்ப செய்வதில் இருந்து பயன்பாட்டு சான்றிதழ்களை அனுப்புவதற்கான தாமதத்தில் இருந்து வங்கிகளில் குறைவான ஆட்கள் இருப்பதை எதிர்த்து, காசோலைகள் பணமாவதில் ஏற்படுகிற நீண்ட காலதாமதத்தில் இருந்து,தனியார் வங்கிகளின் தொந்தரவுகள், கிராம சகாயக்குகள் குறைவாக இருப்பதில் இருந்து எல்லாவற்றையும் போராட்டத்தால் செய்ய வைக்க வேண்டி உள்ளது. ஒவ்வொரு துறையும் முடிந்து போன வேலைக்கு ஆளுக்கு ஒரு அளவுகோலை வைத்துள்ளது. அது ஒருபக்கம் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

‘‘வேலை உறுதி திட்டத்திக்கு என தனியாக அரசு பணியாட்கள் இருக்க வேண்டும். அம்பது அறுபது கிராமங்கள் இருக்கிற ஒரு வட்டாரத்துக்கு ஒரு ஜூனியர் இன்ஜினியர் இருக்கிறார். அவரால் எப்படி அவ்வளவு வேலையையும் கண்காணிக்க முடியும் ? விவசாயத்தில் நெருக்கடி அதிகரித்து இருப்பதால் நகரங்களிலும் வேலை வேண்டும் என்பது கோரிக்கையாக உள்ளது என்கிறார் அவர். தலைமை தணிக்கையாளரின் குழு பாடகாபாத்துக்கும் வந்தது. திட்டம் செயல்படுகிற களத்தில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது என அவர் எடுத்துக்கூறியுள்ளார். வேலைக்கு எடுக்கப்பட்டுள்ள வர்களின் பட்டியலை விவசாயத்தொழிலாளர்கள் மத்தியில் வாசித்து காட்டவேண்டும். அவர்களது கட்டைவிரல் ரேகைகளை பதிந்து கொள்ளவேண்டும் என்கிறார். மோசடியாக வேலைக்கான அட்டையை வைத்து இருப்பவர்களை பிடிக்க எங்களுக்கு உதவு மாறு உதவி மண்டல மாஜிஸ்ட்டிரேட் கேட்டுக்கொண்டார். வங்கியில் இருந்து வந்துள்ள பட்டியலையும் கிராம பஞ்சாயத்து தயார்

செய்த வேலைக்கு ஆள் எடுத்தவர்களின் பட்டியலையும் ஒப்பிட்டு பார்க்குமாறு நான் அவரை கேட்டுக்கொண்டேன். இளநிலை பொறியாளரால் ஒதுக்கப்பட்ட வேலைகளை மேற்பார்வையிட அமர்த்தப்படுகிற மேற் பார்வையாளர்களுக்கு வேலை மிக அதிகம். அவர்கள் வங்கிக்கணக்கு தொடங்க வேண்டும். வேலைக்கான அட்டைகளை தயார் செய்ய வேண்டும். வேலைக்கான ஆட்களின் பட்டடியலை தயார் செய்ய வேண்டும். அவை எல்லாம் வெறும் நான்கு ரூபாய் கூடுதலாக வாங்கிக்கொண்டு செய்ய வேண்டும். பெடகாபாத்தில் ஒரு மேற்பார்வையாளர் இந்த திட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களில் உள்ள ஆண் அல்லது பெண்ணாக இருக்கவேண்டும், பஞ்சாயத்து தலைவரின் குடும்ப உறுப்பினராக இருக்கக்கூடாது என்று விவசாய தொழிலாளர் சங்கம் உறுதிப்படுத்தி உள்ளது.

தூர்வாரும் பணி வேலை உறுதி திட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டும் என்கிறார் ராம்சந்தர். காஞ்ஞரில் உள்ள காஸ்னா கிராமத்தில் உள்ள ஒரு வடிகாலின் ஒரு பகுதியை அவர் காட்டினார். அங்கே யந்திரங்களை ஈடுபடுத்த அவர் அனுமதிக்கவில்லை. இது எனது வார்டு. நான்கு கோடி ரூபாய் மதிப்புள்ள பணியை நான் 309 ஆட்களை வைத்து செய்தேன். ஆனால் இதே வடிகாலின் மறு பக்கத்தில் யந்திரங்களை வைத்து வேலை செய்தனர்.அதனால் மக்கள் வேலை இல்லாமல்இருந்தனர். என்ன மாதிரி வேலை தேவைப்படுகிறது என்பதில் ஒரு முன்கூட்டி திட்டமிடுதல் இல்லை. மாயாதேவி எனும் பெண்ணைப்போல தங்களது வேலையின் மூலம் கிடைத்த பணத்தால் வீடுகளை கட்டிக்கொண்ட குடும்பங்களும் இருக்கின்றன. அவரது மொத்த குடும்பமும் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழான வேலையை செய்தது. படித்தவர்கள் மேற்பார்வையாளர்களாக வேலை செய்தனர்.

ஏதோ ஒரு வேலை கிடைத்தாலும் சரி என்ற அளவில் வேலைக்கான தேவை இருப்பது சந்தேகத்திற்கு இடமில்லாதது. மாநிலங்களில் உள்ள சட்டபூர்வமான குறைந்த பட்சக்கூலிக்கு சமமாக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தரப்படும் கூலியை கொண்டுவர வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும் என்ற மனமில்லாமல் மத்திய அரசு இருக்கிறது மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் நமது நாட்டு விவசாயத்தை மேலும் அதிக உற்பத்தி தரத்தக்கதாக மாற்றுவதற்கு பயன்படுமா என்பது மிகப்பெரிய விஷயம். இந்த திட்டத்தின் கீழ் பணியாற்றுவோரின் அடிப்படையான தேவைகள் நிறைவு செய்யப்பட்டு அவர்கள் தாக்குப்பிடித்து வாழ்க்கையை நடத்துவது தான் இப்போதைய பிரச்சனை.

**ஆதாரம்: – பிரண்ட்லைன் ஜீன் 14 இதழ்,2013**

## இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் 88,436 வீடுகள் கட்ட ரூ.603 கோடி ஒதுக்கீடு

### தமிழக அரசு அறிவிப்பு

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இந்த ஆண்டு கட்டப்பட உள்ள 88,436 வீடுகளுக்கான தமிழக அரசின் பங்கு தொகை ரூ.603 கோடி வழங்க ஜெயலலிதா உத்தர விட்டுள்ளார்.

**தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:** கிராமப்புற பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களுக்காக இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டத்தை மத்திய அரசுடன் இணைந்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டிற்கான அலகு தொகை ரூ.45 ஆயிரம் என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.33,750 மாநில அரசின் பங்கு ரூ.11,250 மேலும் கான்கீரிட் கூரைகளுக்கு என தனியாக மாநில அரசால் ரூ.30 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. தமிழக அரசு 2011ம் ஆண்டு முதல் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைக்க மாநில நிதியில் இருந்து வழங்கப்படும் தொகையை ரூ.30 ஆயிரத்தில் இருந்து ரூ.55 ஆயிரமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டது. இதன்மூலம் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான அலகு தொகை ரூ.1 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டு முதல் இந்திரா நினைவு குடியிரப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டிற்கான அலகுத் தொகையை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.1 லட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதில் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.52,500, மாநில அரசின் பங்கு தொகை ரூ.67,500 ஆகும். இந்த திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 88,436 வீடுகள் தமிழகத்தில் கட்ட மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மாநில அரசின் பங்கு தொகையான ரூ.603 கோடியே 39 லட்சத்து 22 ஆயிரத்தை அனுமதித்து ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**3.8.2013, தினகரன்**

# அடிப்படை வசதி கூட ஏற்படுத்த வழியில்லை நிதி ஆதாரம் இல்லாமல் 6,000 ஊராட்சிகள் திணறல்

சென்னை : மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, பஞ்சாயத்து, ஊராட்சி உள்ளிட்ட அமைப்புகள் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப செயல்படுகின்றன. இவற்றுக்கு சொத்து வரி, வீட்டு வரி, குடிநீர் வரி உள்ளிட்டவை நிதி ஆதாரமாக உள்ளன. தமிழகத்தில் 79,394 கிராமங்கள் அடங்கிய 12,524 ஊராட்சிகள் உள்ளன. இவை மூலம் சாலை, தெரு விளக்கு பராமரிப்பு, சுகாதார வசதிகள், கிராம வேலை உறுதி சட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் மேற்பார்வை மேற்கொள்ளப்படுகின்றன. மக்களுக்கு குடிநீரும் சப்ளை செய்யப்படுகிறது.

இதற்காக ஊராட்சியில் 40 ஆயிரம் லிட்டர் முதல் ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் உள்ளன. இவற்றை பராமரிக்கவும், குடிநீர் விநியோகிக்கவும் பகுதி நேர அடிப்படையில் சுமார் 80 ஆயிரம் குடிநீர் தொட்டி ஆபரேட்டர்கள் உள்ளனர். மேலும், 20 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள் ஊராட்சிகளில் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு மாத சம்பளம் ரூ.700 முதல் ரூ. 2,400 வரை வழங்கப்படுகிறது. இவர்கள் பணி நிரந்தரம் செய்யவேண்டும், ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க வேண்டும் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. போதிய நிதி இல்லாததால் தமிழகத்தில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகள், பணிகளை செய்ய முடியாமல் திணறுகின்றன. குறிப்பாக மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதிலும், மின் கட்டணம் செலுத்த முடியாமலும் சிரமப்படுகின்றன.

ஆயிரம் பேர் குடியிருக்கும் ஊராட்சிகளில் மின் கட்டணம் மாதம் ரூ.15 ஆயிரம் வரையிலும், 25 ஆயிரம் பேர் வரை வசிக்கும் ஊராட்சிகளில் மின்கட்டணம் மாதம் ஒரு லட்சமும் செலுத்தப்படுகிறது. நிதி பற்றாக்குறையால் பல மாதங்கள் மின் கட்டணம் பாக்கியிருப்பதாக ஊராட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பகுதி நேர ஊழியர்களுக்கு மாதந்தோறும் சம்பளமும் விநியோகிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. சில ஊராட்சிகளில் 6 மாதங்கள் வரை சம்பள பாக்கி இருப்பதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து, 20 சதவீத மோட்டார்கள் பழுதடைந்த நிலையிலும், 30 சதவீத தொட்டிகள் பராமரிப்பில்லாமல் மோசமாக உள்ளன. சாலைகள் போட்டு பல ஆண்டுகளாகி விட்டன. சுகாதார வசதிபெயரளவிற்கு கூட இல்லை. அடிப்படை வசதி செய்ய முடியாமல் ஊராட்சி நிர்வாகம் திணறுகிறது. வரி வசூலிக்க கூட ஊழியர்கள் இல்லை. இந்த பணிகளை துப்புரவு அல்லது டேங்க் ஆபரேட்டர்கள் மேற்கொள்கின்றனர். கம்ப்யூட்டர் இருந்தும் ஊழியர்கள் இல்லாததால் அவை காட்சி பொருளாக உள்ளன. ஊராட்சிக்கு ஒரு செயலர் என்ற வீதத்தில் 12,524 பேர் பணியாற்ற வேண்டும். ஆனால், சுமார் 1,500 ஊராட்சி செயலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவர்களது பணியிடங்களை அருகில் உள்ள ஊராட்சி செயலர் கூடுதலாக கவனிக்க வேண்டியுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட டேங்க் ஆபரேட்டர்கள், துப்புரவு பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, காலி பணியிடங்களை நிரப்புவதோடு, தேவையான நிதியை அரசு ஒதுக்க வேண்டும். இதுகுறித்து ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி துறை ஊழியர்கள் சம்மேளன மாநில பொது செயலாளர் கே.ஆர்.கணேசன் கூறுகையில், ஊராட்சி அமைப்புகள் தொடங்கப்பட்ட காலத்தில் பகுதி நேரமாக எழுத்தர், டேங்க் ஆபரேட்டர்கள், துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இதில் எழுத்தர்களுக்கு செயலர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. துப்புரவு பணியாளர்கள், டேங்க் ஆபரேட்டர்கள் பணிநிரந்தரம் செய்யப்படவில்லை.

ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தோடு, தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் வரி வசூலில் 10 சதவீதம் நிதியை ஊராட்சிகளுக்கு ஒதுக்குகிறது. இதில் 5 சதவீத நிதி, அடிப்படை பணிகளுக்கு செலவழிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கடந்த 2003,2004ம் ஆண்டில் மட்டும் நிதி பற்றாக்குறை ரூ.1,500 கோடி. ஒவ்வொரு ஆண்டும் நிதியின் தேவை அதிகரித்தாலும், ஒதுக்கீடு இல்லை. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை அரசு அதிகரிக்க வேண்டும் என்றார்.

**– ஆதாரம்: தினகரன், 10.9.2013**

## மக்கள் தொகை எண்ணிக்கை

147 ஊராட்சிகளில் 10 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் பேரும், 1,354 ஊராட்சிகளில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேரும், 2554 ஊராட்சிகளில் 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் பேரும், 7228 ஊராட்சிகளில் ஆயிரத்திலிருந்து 3 ஆயிரம் பேரும், 1175 ஊராட்சிகளில் 500 முதல் ஆயிரம் பேரும், 66 ஊராட்சிகளில் 500க்கும் கீழ் உள்ளவர்களும் வசிக்கின்றனர். இவர்களுக்கு போதுமான அடிப்படை வசதி கிடைப்பதில்லை.



# காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மணமை ஊராட்சித் தலைவர் வீராசாமி, ஊராட்சி நிலங்களை பாதுகாப்பதற்காக சந்தித்து வரும் தொடர் போராட்டங்கள்

மணமை ஊராட்சித் தலைவராகிய நான் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவன். 2006 ஊராட்சித் தேர்தலில் பொதுத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். என்னுடன் 5 நபர்கள் போட்டியிட்டனர். நான் 570 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற முதல் வேட்பாளர் நான்தான். எங்கள் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 4500. இதில், வாக்காளர்கள் சுமார் 1800. மணமை ஊராட்சியில் ஆதிதிராவிடர்கள், நாயக்கர்கள், யாதவர்கள் ஆகியோர் வசிக்கின்றனர். நான் 8வது வரை படித்திருக்கிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள்.

2006ல் நான் பதவியேற்றதிலிருந்து ஊராட்சிக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் பொதுச் சொத்துகளை பாதுகாப்பதற்கு மிகுந்த முயற்சிகள் மேற்கொண்டேன். மணமை ஊராட்சி கல்பாக்கத்திற்கு மிக அருகில் இருக்கிறது. எனது ஊராட்சியில் திரு. கே. சுந்தரமூர்த்தி என்கிற சுந்தரம் என்பவர், கடந்த 15 ஆண்டுகளாக சட்டத்திற்குப் புறம்பாக இறால் பண்ணைகள் வைத்து குடிநீர், நிலத்தடிநீர், விவசாய நிலம் ஆகியவைகள் மாசுபட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, அதனால் பொது மக்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளானார்கள். இந்த இறால் பண்ணைகளை நிரந்தரமாக மூட வேண்டும் என்று ஊராட்சி மன்றம், கிராம சபை ஆகியவற்றில் தீர்மானங்கள் இயற்றி முறைப்படி திரு. சுந்தரத்திற்கு நோட்டீஸ் அனுப்பினேன். மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டி மனு அளித்தேன்.

தவிர இந்த இறால் பண்ணைகளுக்காகவும் ரசாயன உப்பு தயாரிப்பதற்காகவும் மாத கணக்கில் ஒரே இடத்தில் பல ஏக்கர் பரப்பில் ராட்சத மணல் கரைகள் அமைத்து உப்புத் தண்ணீரைத் தேக்கி, மணமை ஊராட்சியிலிருந்து கடம்பாடி கிராமத்தில் செயல்படும் உப்பு தயாரிப்பிற்கு பக்கிங்காம் கால்வாயில் ஓடும் தண்ணீரை தடை செய்து ராட்சத ஆயில் இன்ஜின்கள் மூலம் உப்புத் தண்ணீரை இறைத்து மணமையிலிருந்து கால்வாய் அமைத்து பல ஏக்கர் பரப்பில் குளங்களும் அமைத்து தண்ணீர் தேக்கி வைத்ததால் விவசாய நிலங்களின் நிலத் தன்மை மாறிவிட்டது. மேலும், நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் கிணறுகள் மாசுபட்டு உப்புத் தண்ணீராக மாறிவிட்டது. இதனால், ஊராட்சியில் நல்ல தண்ணீர் வழங்குவதில் பெரும் பிரச்சனையை சந்தித்தேன். கிராம மக்களும் தோல் வியாதிகளால் அவதிபடுகின்றனர். இத்தகைய செயல்பாடுகள் ஊராட்சியிடம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக நடைபெற்று வந்தன. இதுகுறித்தும் மாவட்ட ஆட்சியிருக்கு மனு அளித்தேன். ஆனால், மாவட்ட நிர்வாகம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக மாவட்ட ஆட்சியரிடமிருந்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205ன் கீழ் 2009ம் ஆண்டில் பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டு பின்னர் நான் பதவி நீக்கம் செய்யப்பட்டேன். உள்துறை செயலர் திரு. அசோக் வரதன் ஷெட்டி அவர்களிடம் மேல்முறையீடு செய்து விசாரணைக்குப் பின்பு 2010ம் ஆண்டில் தலைவரானேன்.

2011 உள்ளாட்சித் தேர்தலில் மீண்டும் நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். என்னுடன் 5 நபர்கள் போட்டியிட்டனர். 5 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். இந்த முறையும் மணமை ஊராட்சி பொதுத் தொகுதியாக அறிவிக்கப்பட்டது. என்னுடைய ஊராட்சியில் மொத்தம் 9 வார்டு உறுப்பினர்கள். அதில் 7 பேர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மீதம் 2 பேர்தான் பிறசாதியைச் சேர்ந்தவர்கள். நான் தலைவராக செயல்படும்போது மன்ற உறுப்பினர்கள் எனக்கு உறுதுணையாக செயல்படவில்லை. துணைத் தலைவர் சோமு, தொடர்ந்து அத்தியாவசியப் பணிகளுக்கு வழங்கப்படும் காசோலைகளுக்கு இணை கையொப்பமிட மறுத்து வந்தார். அவர், எனக்கு ஊராட்சிப் பணிகளில் ஒத்துழைக்க கொடுக்க மறுத்ததோடு 4.5.2012 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் என்னை இழிவுபடுத்தி பேசியதோடு என்னை தாக்கவும் முயற்சித்தார். சோமு அவரது மனைவியை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MNREGA) பணித்தளப் பொறுப்பாளராக எனக்கு எந்தத் தகவலும் தெரிவிக்காமலேயே நியமித்தார். மேலும், அவர் தினசரி வருகைப் பட்டியலில் (NMR) என்னுடைய கையொப்பத்தைப் பெறவில்லை. இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் புகார் அளித்தேன். மேலும், அவர்மீது நடவடிக்கை எடுக்கவும் வேறு உறுப்பினரை துணைத் தலைவராக நியமிக்கவும் மன்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

5வது வார்டு உறுப்பினர் வி. தேவயாணி அவர்கள், தொடர்ந்து 2.4.2012, 3.5.2012, 4.6.2012 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட ஊராட்சிமன்றக் கூட்டத்திற்கு வருகை தரவில்லை. எனவே, இதுகுறித்து எழுத்து மூலம் விளக்கம் அளிக்கக் கோரி தேவயாணிக்கு 22.6.2012 அன்று கடிதம்

அனுப்பினேன். அவர் உரிய விளக்கமளிக்காததால் அவரை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி 29.6.2012 அன்று கடிதம் அனுப்பினேன். தேவயாணி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் இதுகுறித்து விளக்கக் கடிதம் கொடுத்துள்ளார்.

4.7.12 அன்று வட்டார வளர்ச்சி அலுவலர் தேவயாணியை மீண்டும் ஊராட்சி உறுப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எனக்கு கடிதம் அனுப்பினார். ஆனால், தேவயாணி அவர்கள் ஊராட்சியில் மனு செய்து தன்னை மீண்டும் உறுப்பினராக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை. 30.8.2012 வரை அவர் மேல் முறையீடு செய்யவில்லை. எனவே, அவரது உறுப்பினர் பதவி நீக்கப்பட்டது. அந்தப் பதவிக்கு தேர்தல் நடத்துவது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியருக்கும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் கடிதம் அனுப்பினேன். அவரை உறுப்பினராக செயல்பட அனுமதிக்குமாறு பிற உறுப்பினர்கள் 3.12.2012 அன்று மாதாந்திரக் கூட்டத்தில் வலியுறுத்தினார்கள். மேலும், துணைத் தலைவர் சோமு மற்றும் பிற உறுப்பினர்கள் என்னை இழிவாகப் பேசி பதிவேடுகளைப் பிடுங்கியும் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடாமலும் கூட்டம் நடத்தவிடாமலும் தகராறு செய்தனர்.

தொடர்ந்து பிறகு துணைத் தலைவர் மற்றும் 8 வார்டு உறுப்பினர்களும் திருக்கழுக்குன்றம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குச் சென்று வட்டார வளர்ச்சி அலுவலக இளநிலை உதவியாளர் புஷ்பாவிடம் தனித்தனியாக ராஜினாமா கடிதம் கொடுத்தனர். ராஜினாமா கடிதத்தில் நான் தன்னிச்சையாக செயல்படுவதாகவும் அதனால் மக்களின் அத்தியாவசியத் தேவையான குடிநீர், தெருவிளக்கு, சாலை வசதிகளை அவர்களால் செய்து தர முடியவில்லை எனவும் பொய்யாக காரணம் கூறியுள்ளனர். இவர்களது ராஜினாமாவால் இதுவரை எந்தப் பணிகளையும் செய்ய முடியவில்லை. தவிர துணைத் தலைவர் உள்ளிட்ட வார்டு உறுப்பினர்கள் என்னை தரக்குறைவாக பேசுவது, தாக்க முயற்சிப்பது போன்ற செயல்களில் அவ்வப்போது ஈடுபட்டதால், இவர்களுக்கு எதிராக நான் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் கொலை மிரட்டல் புகார் அளித்துள்ளேன். அதற்காக ஆர்.டி.ஓ. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கள் ஊராட்சிக்கு சொந்தமான நான்கரை ஏக்கர் தரிசு நிலத்தை கிரேட் லேக் கல்லூரி நிர்வாகம், அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து அதில் ஓலைக் குடிசையையும் கட்டுமானப் பொருட்களையும் தேக்கி வைத்து மேற்படி இடத்தை குண்டும் குழியுமாக சேதப்படுத்தியுள்ளது. இதுகுறித்து கல்லூரி நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பினேன். மாவட்ட ஆட்சியர் ஊராட்சியின் அனுமதி பெறாமல் அரசு நிலத்தை இந்த தனியார் கல்லூரிக்கு பட்டா போட்டு கொடுத்துள்ளார். இது ஊராட்சிகள் சட்டத்திற்கு புறம்பானது, ஊராட்சிக்கு சொந்தமான நிலத்தை மீண்டும் ஊராட்சியிடமே ஒப்படைக்க வேண்டும் என்று மனு அளித்தேன். உரிய நடவடிக்கை இல்லாததால் இதுகுறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளேன்.

இதுதவிர எனது ஊராட்சிக்கு சொந்தமான, கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள சுமார் 15 ஏக்கர் நிலத்தை சென்னையைச் சேர்ந்த சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும் ஊராட்சிமன்றத்தில் தீர்மானம் இயற்றி நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். ஊராட்சிக்கு சொந்தமான நிலங்களை மீட்கும் வரை எனது போராட்டம் ஓயாது.

**– ஆய்வு மற்றும் அறிக்கை தொகுப்பு:**
**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) & மனித வள மேம்பாட்டு நிறுவனம் (HRDF)**

## மின்சாரத்தை சேமிக்கும் வகையில் 10 ஆயிரம் பசுமை வீடுகளுக்கு எல்இடி பல்பு வழங்க திட்டம்

சென்னை : தமிழக அரசு சார்பில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகளுக்கு முதல்கட்டமாக 10,224 வீடுகளுக்கு எல்இடி பல்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது. தமிழக அரசு சார்பில் பசுமை வீடு திட்டம் கடந்த 2011ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2011, 12 முதல் 2015,16 வரை 5 ஆண்டுகளுக்கு மொத்தம் 3 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்படுகிறது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் மூலம் பசுமை வீடுகளுக்கு சோலார் கருவிகள் அமைத்து தேவையான மின்சாரம் அளிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வீட்டுக்கும் 5 சிஎப்எல் பல்புகள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் அரசு சார்பில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகளுக்கு எல்இடி பல்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான டெண்டரும் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக எரிசக்தி துறையின் உயர் அதிகாரிகள் கூறுகையில், மின்சாரத்தை சேமிக்கும் வகையில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு சோலார் கருவிகளுடன் எல்இடி பல்புகள் வழங்கவுள்ளோம். முதலில் வேலூர், ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

முதல்கட்டமாக 10,224 வீடுகளுக்கு வழங்கவுள்ளோம். சிஎப்எல் பல்பை விட, இதில் மின்சாரத்தை சேமிக்க முடியும். மேலும், எல்இடி பல்புகள் 10 ஆண்டு வரை உழைக்கும். ஒவ்வொரு குடியிருப்புக்கும் 5 பல்புகள் வழங்குவோம். மக்களின் வரவேற்பை பொருத்து, இதை விரிவுபடுத்துவோம் என்றனர்.

**ஆதாரம்: தினகரன், 24.8.2013**

# ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆவேசக் கொம்புகள்

– அனுபம் சக்கரவர்த்தி

**விவசாயிகளின் போராட்டத்திற்குப் பணிந்தது குஜராத் அரசு. தொழிற்சாலைகள் அமைப்பதற்காக திட்டமிடப்பட்ட வட்டாரத்தில் சிறப்பு முதலீடுகள் அளவு சுருங்கியது.**

குஜராத் மாநிலத்தின் சுரேந்திரநகர் மாவட்டத்தில், சீரகப் பயிருக்கு பெயர் பெற்ற ஒரு அமைதியான வட்டம்தான் மண்டல் கடந்த சில மாதங்களாக அது நில உரிமைகளுக்கான போராட்டங்களின் நரம்பு மையமாக மாறியுள்ளது. இந்த வட்டத்தில் உள்ள விவசாயிகளும், கால்நடை மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளவர்களும், தங்களது நிலங்களை தொழிற்சாலை வளாகங்கள் அமைப்பதற்காக மாநில அரசிடம் ஒப்படைக்கத் தயாராக இல்லை. உத்தேசிக்கப்பட்டுள்ள சிறப்பு முதலீட்டு மண்டலங்கள் (எஸ்.ஐ.ஆர்.) திட்டத்தை எதிர்க்கும் அவர்கள், அந்த மண்ணில் உழவு செய்வதன் மூலமாகவும் கால்நடை மேய்ச்சலின் மூலமாகவும் கிடைக்கும் பலன்களை தொழிற்சாலைகளால் ஈடுசெய்ய முடியாது என்று கூறுகிறார்கள்.

## சிறப்பு முதலீட்டு வட்டாரம் (எஸ்.ஐ.ஆர்.) எதற்காக ?

2009ல் சிறப்பு முதலீட்டு வட்டாரங்கள் அமைக்கப்பட உள்ளதாக அறிவித்த குஜராத் அரசு, தில்லி –மும்பை தொழிற்பேட்டை (டீ.எம்.ஐ.சி.) அமைப்பது என்ற மத்திய அரசின் திட்டத்தை ஒட்டியே இந்த எஸ்.ஐ.ஆர். திட்டமும் கொண்டுவரப்படுகிறது என்று கூறியது. தில்லி – மும்பை இடையே சிறப்பு சரக்குப் போக்குவரத்து மண்டலப் பகுதியைச் சுற்றி சுமார் 150 சதுர கி.மீ. பரப்பில் தொழிற்சாலைகளுக்காகவும் வர்த்தக நிறுவனங்களுக்காகவும் என ஒதுக்கப்பட்டு மேம்படுத்தப்படும் என்பது மத்திய அரசின் திட்டம். இந்த டீ.எம்.ஐ.சி. பகுதியில் 38 சதவீதத்திற்கும் மேல் குஜராத் மாநிலத்திற்குள் வருகிறது. இதையொட்டி 13 எஸ்.ஐ.ஆர். வளாகங்களையும் 4 தொழிற்பேட்டைகளையும் உருவாக்க குஜராத் அரசு திட்டமிட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் தயாரிப்பு சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படும். டீ.எம்.ஐ.சி. பகுதிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள 90 பில்லியன் டாலர் முதலீடுகளில் சுமார் மூன்றில் ஒரு பங்கு குஜராத் வளாகங்களுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகளின் போராட்டத்திற்குப் பணிந்த முதலமைச்சர் நரேந்திர மோடி மாநிலத்தில் திட்டமிடப்பட்டுள்ள 13 எஸ்.ஐ.ஆர். வளாகங்களில் ஒன்றான மண்டல் – பகுசராஜி எஸ்.ஐ.ஆர். (எம்.பி.–எஸ்.ஐ.ஆர்.) வளாகத்தின் அளவை கடந்த ஆகஸ்ட் 14 அன்று சுருக்கினார். இந்த ஆண்டு மே மாதம் 14ம் தேதியன்று, எம்.பி. – எஸ்.ஐ.ஆர். வளாகத்திற்காக நிலங்கள் கையகப் படுத்தப்படவுள்ளன என்று அவரது அரசு வட்டார செய்திப் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிட்டது. சுரேந்திரநகர், அகமதாபாத், பத்தான் மாவட்டங்களில் 44 கிராமங்களின் சுமார் 50,880 ஹெக்டேர் விவசாய நிலங்களை கைப்பற்றுவது அரசின் நோக்கம். அதற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியதைத் தொடர்ந்து அரசாங்கம் அந்தத் திட்டத்திலிருந்து 36 கிராமங்களை விலக்கிவிட முடிவு செய்தது. 2014ல் வர இருக்கிற மக்களவைத் தேர்தலை மனதில் கொண்டுதான், பாரதீய ஜனதா கட்சியும் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். கடந்த மூன்று சட்டமன்றத் தேர்தல்களிலும், இந்த 44 கிராமங்களின் மக்கள் பெரும்பாலும் பாரதீய ஜனதா கட்சிக்குத்தான் வாக்களித்தார்கள். விவசாயிகளின் போராட்டம் மிக தீவிரமாக தாக்கம் செலுத்தியதன் காரணமாக, மோடியின் முன்னாள் ஆதரவாளர்களும், பாஜக ஆதரவு ஊராட்சித் தலைவர்களும், உள்ளாட்சி உறுப்பினர்களும் விவசாயிகளின் பக்கமும், கால்நடை மேய்ப்பாளர்களின் பக்கமும் சேர்ந்துவிட்டார்கள். "முந்தைய தேர்தல்களில் நாங்கள் மோடிக்கு ஆதரவாகவே வேலை செய்தோம். நிலங்களை கைப்பற்றி தொழிலதிபர்களிடம் கொடுப்பதற்காக அவற்றை தரிசு நிலங்கள் என்று அறிவித்ததன் மூலம் அவர் விவசாயிகளை ஏமாற்றிவிட்டார்," என்கிறார் லட்சுமண் பாய் வனோல். இவர் சுரேந்தரநகர் மாவட்டத்தின் தசாதா கிராமத்தைச் சேர்ந்தவர், பாரதீய ஜனதா கட்சியின் ஒரு மூத்தத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. மண்டல் வட்டத்தைச் சேர்ந்த அர்வாடா கிராமத்தின் பாஜக தலைவர் கங்கார் தோதியா இதே உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். எம்.பி.–எஸ்.ஐ.ஆர். திட்டத்திற்காக அர்வாடா கிராமத்து மக்கள் தங்களது சுமார் 2,000 ஹெக்டேர் நிலத்தை பறிகொடுக்க இருந்தார்கள். எம்.பி. – எஸ்.ஐ.ஆர். திட்டத்திற்கான நிலப்பரப்பை மோடி அரசு சுருக்கியதற்கு சில நாட்கள் முன்பாக, அந்தத் திட்டத்திற்காக நிலம் கையகப் படுத்தப்படுவதை எதிர்த்து மண்டல் வட்ட ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜமீன் அதிகார் அண்டோலன் – குஜராத் (ஜே.ஏ.ஏ.ஜி.), ஆசாத் விகாஸ் சங்காதன் ஆகிய அமைப்புகளால் விவசாயிகள் போராட்டம் பரவலாக எடுத்துச்

## சட்ட விரோத நிலத்தில் மாருதி நிறுவனம் ?

குஜராத் அரசு 44 கிராமங்களில் மண்டல் – பகுசராஜி முதலீட்டு மண்டலங்கள் அமைப்பது என்று முடிவு செய்திருந்தது. விவசாயிகளின் கொந்தளிப்பைத் தொடர்ந்து அதை 8 கிராமங்களாக அரசு சுருக்கிக்கொண்டுவிட்டது என்ற போதிலும் கூட விவசாயிகளின் கோபம் குறைந்துவிடவில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம், ஹன்சால்பூர் கிராமத்தில் சுமார் 260 ஹெக்டேர் நிலத்தை சிறு கார்கள் உற்பத்திக்காக என மாருதி சுசூகி நிறுவனத்திற்கு அரசு தாரைவார்த்துவிட்டது. அந்தப் நிலத்தில் அலுவலகம் ஒன்றைக் கட்டியுள்ள மாருதி நிறுவனம் காவல் பணியாளர்களையும் நியமித்துள்ளது.

“இந்தப் பிரச்சனை நீதிமன்ற விசாரணையில் இருக்கிறபோது அரசாங்கம் எப்படி நிலத்தை அந்த நிறுவனத்திற்கு வழங்க முடியும்,” என்று ஹன்சால்பூர் கிராம ஊராட்சித் தலைவரும், விவசாயிகளின் போராட்டத்தில் இணைந்திருப்பவருமான அஜ்மல் தாகூர் கேட்கிறார். 2004ம் ஆண்டில் மாநில அரசு நில ஆவணங்களை கணினியில் பதிவு செய்யத் தொடங்கியது. அப்போது அதிகாரிகள் தவறுதலாக ஹன்சால்பூர் கிராமத்தின் 83 ஹெக்டேர் மேய்ச்சல் நிலத்தை தரிசு நிலம் என்று பதிவு செய்துவிட்டனர் என்று கிராம மக்கள் குற்றம்சாட்டுகிறார்கள். 1954ம் ஆண்டின் அரசாங்க ஆவணங்களில் உள்ளபடி, அந்த நிலம் பொது மேய்ச்சலுக்கும் சாகுபடிக்கும் உரியதாகும். இதை ஆதாரமாகக் கொண்டு அந்த நிலத்தைச் சார்ந்திருக்கும் விவசாயிகள் 2010ல் குஜராத் உயர்நீதிமன்றத்தை அணுகினர். நீதிமன்றம் இன்னும் தனது தீர்ப்பை வழங்கவில்லை. “சுமார் 120 பேர் நேரடியாக அந்த நிலத்தைச் சார்ந்து வாழ்கிறார்கள். அதனை மாருதி நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு முன்பாக அரசாங்கம் இந்த விவரத்தை சரிபார்த்திருக்க வேண்டும்,” என்று கூறுகிறார் தாகூர். இதனிடையே, ஹன்சார்பூர் கிராமத்தில் நிலங்களின் விலை விண்ணைத் தொட்டுவிட்டது. 2012ல் அரசாங்கம் அந்த நிலத்தை மாருதி சுசூகி நிறுவனத்திற்கு ஏக்கருக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரையிலான விலையில் கொடுத்தது. அகமதாபாத் நகரைச் சேர்ந்த மனை வர்த்தகர்கள், சுசூகி மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் ஒசாமு சுசூகி அந்தப் பகுதிக்கு வந்து சென்ற பிறகு அங்கு மனைகளில் விலை 12 மடங்கு எகிறிவிட்டது என்று கூறுகிறார்கள்.

நிலத்தரகர்கள் ஹன்சால்பூர் விவசாயிகளை சர்க்கரை தடவிய பேரங்களால் கவர முயல்கிறார்கள். “சனாந்த் கிராமத்து விவசாயிகளுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். அவர்கள் கார் வாங்கினார்கள், அடுக்குமாடி கட்டடங்களில் வீடு வாங்கினார்கள். தங்களுக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் செலவழித்தார்கள். அதன்பிறகு தங்கள் தவறை உணர்ந்து எஸ்.ஐ.ஆர். எதிர்ப்பு நில உரிமை போராட்டத்தில் இணைந்திருக்கிறார்கள். அந்தத் தவறை நாங்கள் செய்யமாட்டோம்,” என்கிறார் ஹன்சால்பூர் கிராமவாசியான கர்ஸன் பாய்.


செல்லப்பட்டது. அதில் பங்கேற்கும் விவசாயிகள், குஜராத் அரசால் 2009ல் கொண்டுவரப்பட்ட எஸ்.ஐ.ஆர். சட்டம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று கோருகின்றனர் (‘சிறப்பு முதலீட்டு வட்டாரம் (எஸ்.ஐ.ஆர்.) எதற்காக’ – பெட்டிச் செய்தி காண்க).

### விவசாயிகளை சீண்டிவிட்டது எது ?

நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான அறிவிப்பாணைகளை மே 14 அன்று குஜராத் அரசு வழங்கியது. அதற்கு முன் தங்களை கலந்தாலோசிக்கவில்லை என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அந்த நிலங்களுக்கு 2009ம் ஆண்டின் சந்தை நிலவரப்படி விலை தரப்படும் என்று அரசாங்கம் தனது அறிவிப்பாணையில் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அருகில் உள்ள சனாந்த் கிராமத்தில் டாடா நானோ கார் தொழிற்சாலை வந்ததைத் தொடர்ந்து நிலங்களின் விலை மூன்று மடங்கு அதிகரித்துவிட்டது. “அதுமட்டுமல்ல நிலத்தின் விலையில் 60 சதவீதத்தை மட்டுமே கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. இது விவசாயிகளை மேலும் ஆத்திரப்படுத்திவிட்டது,” என்று ஆசாத் விகாஸ் சங்காதன் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான லால்ஜிபாய்தேசாய் கூறுகிறார். ஜூன் 18 அன்று சுமார் 5,000 விவசாயிகளும், கால்நடை மேய்ப்பாளர்களும் மண்டல் நகரத்திலிருந்து மாநிலத்தின் தலைநகரம் காந்திநகர் வரையில் டிராக்டர் பயணம் மேற்கொண்டார்கள். அவர்களது நிலம் வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தப்பட மாட்டாது என்று அவர்களிடம் மோடி உறுதியளித்தார்.

முதலமைச்சரின் இந்த வாக்குறுதி அவர்களது கோபத்தை ஓரளவுக்காவது மட்டுப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், ஜூன் 20 அன்று அவரது அரசு மற்றொரு ஆணையைப் பிறப்பித்தது. அது போராட்டத்தைத் தீவிரப்படுத்திவிட்டது. நர்மதா நதி நீரை குஜராத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லும் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள சர்தார் சரோவர் நர்மதா நிகாம் லிமிடெட் (எஸ்.எஸ்.என்.என்.எல்.)” நிறுவனம், மண்டல் வட்டத்தில் உள்ள நர்மதா திட்டம் சார்ந்த 2,922 ஹெக்டேர் நிலத்தை,

## விவசாயிகளின் உயிராதார மையம்




*ஆதாரம்: குஜராத் நீர்வழி நிர்வாக நிறுவனம்*

தனது திட்டத்தின் கீழ் உட்படாத பகுதிகள் என்று அறிவித்தது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதி எம்.பி. – எஸ்.ஐ.ஆர். திட்டத்திற்குள் வருகிறது. மண்டல் வட்டத்தின் ஹன்சால்பூர் கிராமத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்க மாருதி – சுசூகி நிறுவனம் திட்டமிட்டுள்ளது ('சட்ட விரோத நிலத்தில் மாருதி நிறுவனம்' – பெட்டிச் செய்தி காண்க). அந்த நிறுவனத்தின் நோக்கம் எளிதாக நிறைவேறுவதற்கு உதவியாக, நர்மதா திட்டத்தின் கால்வாயிலிருந்து அந்தப் பகுதிக்கான தண்ணீர் நிறுத்தப்பட்டது என்று, தங்களது பெயரை வெளிப்படுத்த விரும்பாத எஸ்.எஸ்.என்.என்.எல். அதிகாரிகள் சிலர் தெரிவிக்கின்றனர். நிலப்பரப்பு சுருக்கப்பட்டபின் எம்.பி.–எஸ்.ஐ.ஆர். திட்டத்தின் கீழ் வரும் 8 கிராமங்களில் ஹன்சால்பூரும் ஒன்று.

### உழவர்களின் உயிராதாரத்தை குறிவைக்கும் தொழிலதிபர்கள்

நர்மதா கால்வாய் திட்டத்தில் உத்தரவாதமாக தண்ணீர் வரத் தொடங்கியதால், மண்டல் – பகுசராஜி வட்டாரத்தில் கடந்த பத்தாண்டு காலத்தில் விவசாயம் மிகப்பெரும் வளர்ச்சியைக் கண்டது. இந்த வட்டாரத்து விவசாயிகள் முன்பு ஒரு போக விவசாயம்தான் செய்து வந்தார்கள். இப்போது ஆண்டுக்கு மூன்று போக சாகுபடி செய்கிறார்கள். ஆசியாவின் மிகப்பெரிய சீரகச் சந்தையின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் உஞ்ஜா விவசாய விளைபொருள்கள் சந்தைக்குழு, உலகத்தின் மிகச் சிறந்த சீரகம் மண்டல் பகுதியில் விளைவிக்கப் படுகிறது என்று தெரிவிக்கிறது. இப்பகுதியில் இதர பயிர்களின் உற்பத்தியும் உலக சராசரியைவிட அதிகரித்துள்ளது ('விவசாயிகளின் மையம்' – பெட்டிச் செய்தி காண்க). "இந்தப் பகுதியில் விவசாய உற்பத்தி சிறப்பாக இருப்பது நில உடைமையை பெருமைக்குரிய ஒன்றாக மாற்றியுள்ளது," என்று வாட்காம் கிராமத்தைச் சேர்ந்த கவுசிக் சிந்தாவ் கூறுகிறார். எம்.பி. – எஸ்.ஐ.ஆர். சுற்றுப்பகுதியில் அமைந்துள்ள கிராமம் இது. 2011ல் கென்யா நாட்டிலிருந்து திரும்பி வந்தவரான சிந்தாவ், தனக்கு வாரிசு உரிமையாகக் கிடைத்த 100 ஹெக்டேர் நிலத்தில் பருத்தி, சீரகம் சாகுபடி செய்து வருகிறார். "எங்களது ராஜ்புத் சமூகத்தைச் சேர்ந்த விவசாயிகள் யாரும் எந்த நிலையிலும் தனது நிலத்தை விற்க முன் வரமாட்டார். நாங்கள் எங்கள் நிலத்தை விட்டுக்கொடுத்துவிடுவோம் என்று அரசாங்கம் நினைத்தது பெரிய தவறு," என்கிறார் அவர். எம்.பி. – எஸ்.ஐ.ஆர். திட்டத்தை விலக்கிக்கொண்ட அரசு, அதன் பின் ஆகஸ்ட் 15 அன்று, கால்வாய் திட்டத்திற்கு உட்படாத பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் நர்மதா கால்வாய் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்று உறுதியளித்தது. ஆனால், அரசாங்கத்தின் இந்த வாய்மொழி உத்தரவாதத்தை நம்புவதற்கு விவசாயிகள் தயாராக இல்லை. "எங்களுக்கு இன்னும் நர்மதா கால்வாயிலிருந்து தண்ணீர் வரவில்லை" என்று சிந்தாவ் கூறகிறார்.

எம்.பி.–எஸ்.ஐ.ஆர். திட்டம் செயல்படுத்தப்படுமானால் சுமார் 75,000 மாடுகளை வெளியேற்ற வேண்டியிருக்கும். அரசாங்க கூட்டுறவு அமைப்புகளுக்கும் தனியார் பால் நிறுவனங்களுக்கும் அந்த மாடுகள்தான் பால் வழங்கி வருகின்றன. சமூக மேய்ச்சல் நிலத்தை சார்ந்திருப்பவர்களான மால்தாரி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். எம்.பி. – எஸ்.ஐ.ஆர். திட்டத்தில் சுமார் 15 சதவீத நிலம், மல்தாரி சமூக மக்களுக்கு சொந்தமான மேய்ச்சல் நிலப்பகுதியில் வருகிறது. இத்திட்டத்தை மோடி அரசு விலக்கிக் கொள்ளவில்லை என்றால் தங்களது மாடுகளை தலைநகரத்திற்கு ஓட்டிச் செல்வதென்று இந்த மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள். "போராட்டத்திற்கு அனைத்து சமூகங்களின் முழு ஆதரவும் கிடைத்துள்ளது. ஏனென்றால், அவர்களது ஒரே வாழ்வாதாரம் நிலம்தான்," என்று தேசாய் கூறுகிறார். பல கிராமங்களில், கூட்டம் கூட இருப்பதை முரசறைந்து அறிவிக்கிறார்கள். அவ்வாறு அறிவித்த சில நிமிட நேரங்களில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும், கூட்டம் நடைபெறுகிற கோயில்களின் முன்னால் திரள்கிறார்கள். எந்த அளவிற்கு தங்களது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற உணர்வு பரவியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. "எம்.பி. – எஸ்.ஐ.ஆர். திட்டம் விலக்கிக்கொள்ளப்படுவது எங்களது போராட்டத்திற்கான பாதி வெற்றிதான். உத்தேசிக்கப்பட்டுள்ள எஸ்.ஐ.ஆர். திட்டத்தின் கீழ் விளை நிலங்கள் கொண்டுவரப்படுவதை விவசாய சமூகங்கள் விரும்பவில்லை. விவசாயிகளை மனதில் கொண்டுதான் அரசாங்கம் எஸ்.ஐ.ஆர். சட்டத்தை முறைப்படுத்த வேண்டும்," என்கிறார் தேசாய். போராட்டத்தில் பங்கேற்றுள்ள மற்றவர்களும் இதில் உடன்படுகிறார்கள்.

**ஆதாரம்: Down To Earth Sepetmber 16-30, 2013**

# மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், கிண்ணிமங்கலம் ஊராட்சித்தலைவர் விஜயராணி மீது நிகழ்த்தப்படும் தீண்டாமை வன்முறை குறித்த உண்மையறியும் குழுவின் அறிக்கை

**சம்பவத்தின் பின்னணி:**

மதுரை மாவட்டம் திருமங்கலம் ஒன்றியம் கின்னிமங்கலம் ஊராட்சி தலைவர் விஜயராணி. இவரை கடந்த ஆகஸ்ட் 15, 2013. அன்று நடந்த கிராமசபை கூட்டத்தை முடித்துவிட்டு பள்ளிக் கூடத்தில் கொடியெற்ற சென்றுள்ளார். அப்போது தலித் பெண் கொடியை ஏற்றக் கூடாது என்று ஆதிக்க சாதியினர் தகராறு செய்துள்ளனர். மேலும், ஆதிக்க சாதியினர், தலித் மக்கள் வணங்கும் கோவிலில் மது அருந்துவதும், கஞ்சா அடிப்பது வழக்கமாக கொண்டுள்ளனர். அந்த வழியே வரும் பெண்கள், பொதுமக்கள் சாதியின் பெயரை சொல்லி திட்டி வேண்டுமென்றே சண்டைக்கு இழுத்தும் வருகின்றனர். இதனை தட்டிக்கேட்ட கோவில் பூசாரியை அடித்ததுடன், கோவில் மின்சாரத்தையும் துண்டித்துள்ளனர். இது தொடர்பாக 26.08.2013 அன்று செக்காணூரணி காவல்நிலையத்திலும், மதுரை எஸ்.பி., அலுவலகத்திலும் விஜயராணி புகார் கொடுத்துள்ளார். இந்த செய்தி தினசரி நாளிதழ் தினமலர், ஆங்கில நாளிதழான எக்ஸ்பிரஸிலும் வந்தது. இந்த சம்பவத்தை அறிந்த மனித உரிமை மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, ஊராட்சி அரசாங்கம் பெண் தலைவர் கூட்டமைப்பு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த சம்பவத்தை கையில் எடுத்தது. இதுகுறித்து தகவல்கள் அறிய 3 பேர் கொண்ட ஒரு உண்மை அறியும் குழுவை அமைத்தனர். இந்த குழு ஆகஸ்ட் 29ம் தேதி அன்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று தனது கள ஆய்வை மேற்கொண்டது.

**உண்மையறியும் குழு:**

1. திருமிகு.சித்ரா, ஊராட்சி அரசாங்கம் பெண் தலைவர் கூட்டமைப்பு.
2. திருமிகு. ஹேமாவதி, மனித உரிமை மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF).
3. திருமிகு.தெய்வேந்திரன். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD)

**கிண்ணிமங்கலம் கிராமம் குறித்த பொது தகவல்:**

கிண்ணிமங்கலம் ஊராட்சியானது, 9 வார்டுகளை உள்ளடக்கியது. இரண்டு வார்டுகளில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மீதமுள்ள 7 வார்டுகளில் 3 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள், 4பிற்படுத்தப்பட்ட உறுப்பினர்கள் என 7 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். துணைத்தலைவராக பிரமலைக்கள்ளர் சாதியைச் சேர்ந்த சிவன் என்பவர் ஊராட்சித் தலைவர் விஜயராணி ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள் 1.கிண்ணிமங்கலம், 2.மாவிலிபட்டி, 3.பூவரசம்பட்டி, 4.ஆலம்பட்டி, 5.பொட்டல்பட்டி, 6.புதுமங்கலம், 7.மீனாட்சிபட்டி, 8.நாகர்கோவில்பட்டி, 9.ஏகநாதபுரம், 10.கிண்ணிமங்கலம் ஒத்தவீடு ஆகும். மொத்தவாக்காளர்கள் 4000. இங்கு வசிப்பவர்களில் பறையர் இனத்தவர் அதிகம். அடுத்தபடியாக கள்ளர் இனத்தவர்கள் உள்ளனர். கோனார், வளையர், சக்கிலியர், ஆசாரி போன்ற இனத்தவர்கள் குறைந்த எண்ணிக்கையில் வசிக்கின்றனர். பிரமலை கள்ளர் ஜாதியினர் குறைவாக இருந்தாலும் அவர்களின் ஆதிக்கம்தான் கிராமத்தில் நிலவுகிறது.

கிண்ணிமங்கலம் 9 வார்டுகளை கொண்டது ஆனால் தற்போது 7 உறுப்பினர்கள் உள்ளனர் பெயர்கள்:

| | சாதி | வார்டு |
|---|---|---|
| 1. துணைதலைவர் சிவன் | பிற்படுத்தப்பட்டவர் | 1 |
| 2. பெரியபாண்டி | தாழ்த்தப்பட்டவர் | 2 |
| 3. ஜோதிபெண் | தாழ்த்தப்பட்டவர் | 3 |
| 4. காசம்மாள் | பிற்படுத்தப்பட்டவர் | 4 |
| 5.மோகன் | பிற்படுத்தப்பட்டவர் | 5 |
| 6. ரவி | பிற்படுத்தப்பட்டவர் | 6 |
| 7.சுமதி | பிற்படுத்தப்பட்டவர் | 7 |

**கிண்ணிமங்கலம் ஊராட்சியில் நடைபெற்றுள்ள வளர்ச்சித்திட்டங்கள்:**

- NREGA திட்டத்தில் 2000ம் பேர் பதிவு செய்யப்பட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளது. NREGA பணியை மேற்பார்வையிட 2 நபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதில் 1 நபர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகப்பை சார்ந்தவர். NREGA வேலை நடைபெறும் பொழுது தினசரி 400 பேர் வரை வேலை செய்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தனியாகவும் மற்ற ஜாதியினருக்கு தனியாகவும் வேலை பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை

ரூ.40லட்சத்தில் 1. கீழ்க்கண்மாய் ஆழப்படுத்துதல், 2. மீனாட்சிபட்டி கண்மாய் ஆழப்படுத்துவது, 3. கிண்ணிமங்கலம் மேலக்கண்மாய் ஆழப்படுத்துதல், 4.புதுமங்கலம் புதுக்கண்மாய் ஆழப்படுத்துதல், 5.கிண்ணிமங்கலம் கீழ்க்கண்மாய் கிழக்குப்பகுதி ஆழப்படுத்துதல் மீனாட்சிப்பட்டி ஊரணி ஆழப்படுத்துதல் போன்ற வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது.

- தாய்திட்டத்தின் கீழ் 40 லட்சம் செலவில் மயான கூரை அமைத்தல், மயானத்திற்கு பாதை மற்றும் லைட்போடுதல், 2மேல்நிலைகுடிநீர் தொட்டி அமைத்தல், தார்ச்சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ஊராட்சி நிதியின் கீழ் 26 புதிய தெருவிளக்குகள், போடப்பட்டுள்ளது. ரூ.3 லட்சம் செலவு செய்து 2 கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் கிராவல் ரோடு புதிய குடிநீர் குழாய்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
- MP நிதியின் கீழ் ரூ.3லட்சம் செலவில் நாடகமேடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- பள்ளிகளுக்கு கழிப்பறை கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.
- பசுமைவீடு திட்டத்தின்கீழ் 20 வீடுகள் கட்டிகொடுக்கப்பட்டுள்ளது இதில் 15 வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் 5 வீடுகள் இதர ஜாதியினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் 36 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 24 வீடுகளும் இதர ஜாதியினருக்கு 12 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கிண்ணிமங்கலம் மீனாட்சிபட்டி பள்ளி தரம் உயர்த்தப்பட்டு உயர்நிலை பள்ளியாக மாற்றப்பட்டுள்ளது.

### சந்தித்த நபர்கள்:

1. ஊராட்சித்தலைவர் விஜயராணி,
2. ஊராட்சி மன்றத்தலைவரின் கணவர் முத்தையா
3. கருப்பாயி என்ற ராஜகாந்தம், க/பெ.கருப்பையா, கிண்ணிமங்கலம்
4. P. சுகுமார், காவல்துறை ஆய்வாளர், செக்காணூரணி காவல்நிலையம்.
5. பாலமுருகன், கிண்ணிமங்கலம்
6. சேகர், கிண்ணிமங்கலம்
7. பாஸ்கரன், கிண்ணிமங்கலம்.
8. T.D. ராமதாஸ், BDO, திருமங்கலம்
9. கருணாகரன், Deputy BDO, திருமங்கலம்.
10. சிவன், ஊராட்சித் துணைத்தலைவர் (கிண்ணிமங்கலம்), செக்காணூரணி
11. மின்வாரிய ஊழியர் கோவிந்தராஜன், கிண்ணிமங்கலம்.
12. மதுமதி, AD Panchayat, மதுரை
13. சரவணக்குமார் DSP உசிலம்பட்டி.

ஊராட்சித்தலைவர் விஜயராணி: 10ம்வகுப்புவரை படிச்சிருக்கேன். என் கணவர் பெயர் முத்தையா அவரு 12ம் வகுப்பு வரை படிச்சிருக்கிறார். எங்களோட முக்கியத்தொழில் விவசாய கூலிவேலைதான். நிலம் கொஞ்சம் இருக்கு.

கிண்ணிமங்கலம் ஊராட்சியில் கடந்த 2006ம் ஆண்டுகள் வரை ஊராட்சி மன்றத்தலைவர்களாக பிரமலைக்கள்ளர் சாதியைச் சேர்ந்தவர்கள் தான் இருந்தனர். பஞ்சாயத்துராஜ்சட்டம் அமுலுக்கு வந்ததும் இடஒதுக்கீடு கிடைத்தது. அதனால 2006ம் வருஷம் நடந்த கிண்ணிமங்கலம் ஊராட்சியில் தலித் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது கிண்ணிமங்கலம் ஊராட்சித் தலைவர் தேர்தலில் நான் போட்டியிட்டு தோற்றுவிட்டேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்து முதன்முதலாக ஊராட்சித் தேர்தல் நடத்தப்பட்டது முதல் 2001ம் ஆண்டு நடைபெற்ற ஊராட்சித் தேர்தல் வரை எனது மாமனார் வெள்ளையன் அவர்கள் கிண்ணிமங்கலம் ஊராட்சியின் வார்டு உறுப்பினராக தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளார். 2006 ஆண்டு தேர்தலில் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்பொழுது தலித்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணத்தால் இந்த முறை ஊராட்சித் தலைவர் பதவிக்கு நம் குடும்பத்திலிருந்து யாராவது ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் எனது மாமனார் என்னை வேட்பாளராக போட்டியிடவைத்தார். ஆனால் பிரமலைக்கள்ளர்கள் ஆதரவு தெரிவிக்காததால் தோல்வியுற்றேன். ஆனாலும், தற்பொழுது நடைபெற்ற 2011ம் ஆண்டு தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு நான் வெற்றி பெற்று தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஊராட்சி மன்றத் தேர்தலின் போது என்னை எதிர்த்து போட்டியிட்டவர்கள் இந்திராணி, இருளாயி, லட்சுமி ஆகியோர் இதில் இருளாயி சென்றமுறை ஊராட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். எனவே அவருக்கு மக்கள் ஆதரவில்லை. இந்திராணி என்பவருக்கு

பிரமலைக்கள்ளர் ஜாதியை சேர்ந்த 1. பரணித்தேவர், 2. ராசுத்தேவர், 3. அய்யாவுத்தேவர், 4.மணித்தேவர் ஆகியோர் ஆதரவாக வாக்கு கேட்டனர். இருப்பினும் பெரும்பாலனவர்களின் ஆதரவுடன் நான் வெற்றிபெற்றேன். இதனால் மேற்குறிப்பிட்ட 4 நபர்களும் ஊராட்சித் தலைவர் என்மீது கோபமாக இருந்தனர். பின்பு ஊராட்சிக்கான துணைத்தலைவர் தேர்தல் நடைபெற்றது. ரவி என்பவரும் சிவன் என்பவரும் போட்டியிட்டனர். இத்தேர்தலில் 6வார்டு உறுப்பினர்கள் வாக்களித்தனர் இதில் ரவி, சிவன் இருவருக்கும் தலா 3 வாக்குகள் பெற்று சமநிலையில் இருந்தார்கள். எனவே ஊராட்சித்தலைவர் யாருக்கு வாக்களிக்கிறாரோ அவர்தான் துணைத்தலைவராக வெற்றிபெறமுடியும் இந்நிலையில் நான், சிவன் என்பவருக்கு ஆதரவாக வாக்களித்தால் சிவன் வெற்றிபெற்றார். பரணித்தேவர் குழுவினர் ஆதரித்த ரவி தோல்வியுற்றார். இதனால் என் மீது மேலும் கோபத்தில் இருந்தனர்.

தேர்தல் நடைமுறைகள் முடிவுற்றவுடன் பரணித்தேவர், த/பெ.பெரியமாயத்தேவர் (வயது 50), வாத்துக்கார மணி, த/பெ.பழனியாண்டி (வயது 45), மணித்தேவர், த/பெ.கட்டழகு அய்யாவு தேவர் (வயது 45), காசி, த/பெ.காசி (வயது 25), ராசுத்தேவர், த/பெ.ராசு பெரிய கருப்பத்தேவர் (வயது 65) கருவாயன் மணி ஆகியோர் ஊராட்சி தலைவரின் செயல்பாடுகளில் அடிக்கடி தலையிட்டு நாங்கள் சொல்கிறபடி கேட்டுத்தான் செயல்படவேண்டும் எங்களுக்கு பினாமியாகத்தான் இருக்க வேண்டும் என்று மிரட்டினார்கள். மேலும் முதலமைச்சரின் ஆடு வழங்கும் திட்டம், பசுமை வீடுதிட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகியவற்றின் பயனாளிகளாக தங்களுக்கு வேண்டியவர்களைத்தான் தேர்வு செய்ய வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரித்து கொடுத்துள்ளனர். இதனால் நாங்கள் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்ததுடன் எம்.பி. எம்.எல்.ஏ. ஆகியோர் பரிந்துரை செய்தவர்களையும் பயனாளிகள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு திட்டங்களை பெற்று தந்தேன்.

அதன்பிறகு ராசு பெரியத்தேவர் சுடுகாடு மற்றும் சமுதாய கிணறு அருகில் உள்ள 9 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அதற்கு ஊராட்சியில் அங்கீகாரம் வழங்குமாறு கேட்டுள்ளார். அதற்கும் ஊராட்சித் தலைவர் மறுத்துவிட்டார். மேலும் வாத்துக்கார மணி ஊராட்சிமன்ற அலுவலகத்தின் முன்புறத்தில் மாடுகளை கட்டியும், கிண்ணிமங்கலம் கீழக்கண்மாய் செல்லும் வழியில் உள்ள பாதையை ஆக்கிமித்து குப்பையை கொட்டியுள்ளார். இதை ஊராட்சிமன்றத் தலைவரான நான் தடுத்ததுடன் திருமங்கலம் BDO விடமும் புகார் கொடுத்தேன். இதனால் மேலும் கோபமடைந்த பரணித்தேவர் குழுவினர் தகவல் உரிமை சட்டத்தின் மூலம் ஊராட்சியில் வரவு செலவு கணக்குகளை கேட்டு மிரட்டினார். மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மாதந்தோறும் பொய் புகார்களை கொடுத்துவந்தார். NREGA வேலை நடைபெறும் பொழுது 60 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது, முதியோர் உதவித்தொகை, பெருபவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்று கூறிவது, குடிநீர் குழாய்களை உடைத்துவிடுவது, தெருவிளக்குகளை எரியவிடாமல் வயர்களை இணைத்து பியூஸ் போக வைப்பது தெருவில் நடந்து செல்லும் பொழுது என்னை ஜாதி பெயர் சொல்லி திட்டி நீயெல்லாம் எங்கள் ஊராட்சிக்கு தலைவியா, உன் கணவனை எதற்கு ஊராட்சி அலுவலகங்களுக்கு அழைத்து செல்கிறாய் என்று மிரட்டுவது போன்ற பல்வேறு இடையூறுகளை செய்தனர்.

இது குறித்து பரணித்தேவர் குழுவினர் மீது BDO, மாவட்ட ஆட்சித்தலைவர், செக்காணூரணி காவல்துறை ஆகியோர் நான் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பரணித்தேவர் குழுவினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் இனிமேல் இது போன்ற செயல்களில் ஈடுபடகூடாது அவ்வாறு புகார் வந்தால் உங்கள் மீது வழக்கு தொடரப்படும் என்று எச்சரித்து எழுதி வாங்கி கொண்டு அனுப்பினார்.

இந்நிலையில் கடந்த 2013, ஆகஸ்ட் 15 அன்று கிராமசபை கூட்டம் முடித்துவிட்டு பள்ளிக்கூடங்களில் கொடியேற்ற சென்ற போது பரணித்தேவர் குழுவினர் கொடியேற்றும் போது தகராறு செய்து, ஜாதியை சொல்லி அடிக்க வந்தார். அப்போது அங்கிருந்த BDO மற்றும் அதிகாரிகள் இதில் தலையிட்டு பிரச்சனை எதுவும் வேண்டாம் என்று சமரசம் செய்து அனுப்பினார். அதன்பிறகு பரணித்தேவர் குழுவினர் தெருவிளக்குகளை எரியவிடாமல் செய்துள்ளார்கள். மேலும் தலித்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கோவிலில் உட்கார்ந்து மது மற்றும் கஞ்சா குடித்து விட்டு தலித் பெண்களையும், பொது மக்களையும் ஜாதியை சொல்லியும் கெட்ட வார்த்தைகளாலும் திட்டினர். இதை தட்டிகேட்ட கோவில் பூசாரியை அடித்ததுடன் கோவில் மின்இணைப்பையும் துண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக 26.08.2013 அன்று செக்காணூரணி காவல் நிலையத்திலும், மதுரை SP அலுவலகத்திலும் நான் புகார் கொடுத்ததின் பேரில் பரணித்தேவர் குழுவினர் 5 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 26.08.2013ந்தேதி பரணித்தேவர் குழுவினர் என் மீது பல்வேறு ஊழல்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் மனு கொடுத்துள்ளனர். ஊராட்சி அலுவலகத்தில் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்ட செயல்பாடுகளில் என் கணவர் முத்தையாவின் தலையீடு உள்ளது என்று கூறி

பரணித்தேவர் குழுவினர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு என் மீது புகாராக அனுப்பியுள்ளனர். மேலும் இவர்கள் ஒரு தலித் ஊராட்சித் தலைவர் சுயமாக செயல்படுவதை விரும்பவில்லை. தங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்கள் தேர்வு செய்யும் நபர்களுக்கு தான் நலத்திட்டங்கள் பயன்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள். முக்கியமாக பரணித்தேவர் குழுவினர் தேர்வு செய்த நபர்களான 1. மணி, 2.கருவாயன் மணி, 3.பரணித்தேவர் மற்றும் சிலருக்கு முதலமைச்சரின் ஆடு வழக்கும் திட்டத்தின் கீழ் ஆடு வழங்க கேட்டனர். ஆனால் இதில் ஒருவருக்கு கூட கிடைக்கப்படவில்லை என்பதால் என் மீது ஆத்திரத்தில் இருந்தனர்.

மேலும், கிராமங்களில் சிமெண்ட் சாலைகள் அமைப்பது, சுடுகாடு சாலைகள் அமைப்பது, பசுமைவீடு கட்டுவது, பொது கட்டிடங்கள், கழிப்பறைகள் கட்டுவது போன்ற வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தும் பொழுது கிராமத்தில் அந்தந்த பகுதியில் உள்ள முக்கியஸ்தர்கள் கமிசன் கேட்கிறார்கள். அவர்களுக்கு கமிசன் கொடுக்க வேண்டியுள்ளது. கமிசன் தரமுடியாது என்று கூறினால்மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பொய் புகார் தெரிவிக்கிறார்கள்.

குறிப்பாக மாவிலிபட்டி என்ற கிராமத்தில் மயானத்திற்கு தார்சாலை அமைத்தபோது ரூபாய் 5ஆயிரம் வரை கமிசன் கொடுக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் ரூபாய்க்கு திட்டம் செயல்படுத்தப்பட்டால் 1 லட்சம் ரூபாய் கமிசன் கொடுக்க வேண்டும் என்று BDO, MLA, சேர்மன் மற்றும் ஆளும் கட்சிக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள். கிண்ணிமங்கலம் கிராமத்தில் மந்தை தெருவிற்கு சிமிண்ட் ரோடு போட்டபோது இவ்வாறு கமிசன் கொடுக்கப்பட்டது.

### ஊராட்சித் தலைவி விஜயராணியின் கணவர் முத்தையா

கடந்த 2011ம் ஆண்டு ஊராட்சி தேர்தல் முடிவுற்று என் மணைவி ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பதவியேற்றபின் என் மனைவியும் மற்றும் தலித் வார்டு உறுப்பினர்கள் அனைவரும் நாற்காலியில் அமராமல் நின்று கொண்டுதான் பதவியேற்றார்கள். ஆனால் மற்ற ஜாதி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் நாற்காலியில் அமர்ந்து பதவி ஏற்றனர். மேலும் இன்றுவரை ஊராட்சிமன்ற அலுவலக நாற்காலியில் அமர்ந்து என் மனைவி பணி செய்ததில்லை. மேலும் கிராமசபை கூட்டங்கள் நடைபெறும்போது அதிகாரிகள் முன்பு மட்டும் நாற்காலியில் அமரமுடியும். மற்றநேரங்களில் நின்றுகொண்டுதான் கிராமசபை கூட்டம் நடைபெறும்.

இங்கு தொடர்ந்து தீண்டாமை கொடுமைகள் நிகழ்த்தப்பட்டு வருகிறது. என் மனைவி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அமர்ந்து பணி செய்யமுடியாதநிலை உள்ளது. அலுவலகத்தில் ஆடு, மாடுகளை கட்டி வைத்தும் குப்பைகளை கொட்டியும், சிறுநீர் கழித்தும் அலுவலகத்திற்குள் சுகாதார இல்லாததால் அங்கு சென்று பொதுமக்கள் குறைகளை கேட்க முடியாத நிலையுள்ளது. எனவே, இந்த உண்மை சம்பவத்தை அறிந்துகொள்ள அதிகாரிகள் மற்றும் கிராம பொதுமக்களை வார்டு உறுப்பினர்கள் நேரடியாக ஊராட்சி அலுவலகத்தை வந்து பார்வையிட்டும் விசாரணை நடத்த வேண்டும்.

### கிண்ணிமங்கலத்தை சேர்ந்த பாலமுருகன், சேகர், பாஸ்கரன்

ஆடு, மாடு கட்ட இடம் இல்லாதவர்கள் இங்குதான் கட்டுவார்கள் இதை தடுக்க முடியாது. மேலும் ஊராட்சி அலுவலகத்தின் அருகில் கிராம பொது மந்தை இருப்பதால் இங்கு உட்காருபவர்கள், அலுவலகத்தை சுற்றி சிறுநீர் கழித்து வருகிறார்கள். மேலும் சிலர் மது அருந்திவிட்டு பாட்டில்களை உடைத்து விடுகிறார்கள். இதை நாங்களும் கண்டித்து கொண்டுதான் இருக்கிறோம் இருப்பினும் கட்டுப்படுத்தமுடியவில்லை.

### கருப்பாயி (எ) ராஜகாந்தம்

க/பெ.கருப்பையா: ஊராட்சித் தலைவர் விஜயராணியின் வீட்டு அருகில் தலித் மக்கள் குடியிருக்கும் பகுதியில் டீகடை நடத்தி வருகிறேன். என் கடையிலும் எதிரில் உள்ள தலித்களுக்கு சொந்தமான கோவிலிலும் பரணித்தேவர் குழுவினர் மற்றும் கள்ளர் ஜாதியினர் உட்கார்ந்து மதுஅருந்திவிட்டு கெட்ட வார்த்தைகளாலும், ஜாதிபெயரை சொல்லியும் திட்டுவார்கள். ஊராட்சி தலைவரிடம் குடிக்க பணம் கேட்பார்கள். கொடுக்கவில்லை என்றால் தகராறு செய்வார்கள். குடிநீர் குழாயை உடைப்பார்கள், தெரு விளக்கை எரியவிடாமல் செய்வார்கள்.

## T.D. ராமதாஸ், *BDO.* கருணாகரன், *Deputy BDO* ஆகியோரை திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பேசியதாவது

கிண்ணிமங்கலம் ஊராட்சிமன்ற அலுவலகத்தின் முன்பு ஆடு, மாடுகளை கட்டக்கூடாது என்றும், குப்பைகளைக் கொட்டக்கூடாது சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று கிராம பொதுமக்கள் மற்றும் ஆடு, மாடு கட்டுபவர்களை அழைத்து எச்சரித்துள்ளோம். இப்போது யாரும் அவ்வாறு செய்வதில்லை. 26.08.2013 அன்று நடைபெற்ற சம்பவம் குறித்தும், மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தது குறித்தும், பரணித்தேவர் குழுவினர் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும் எங்களுக்கு தெரியாது என்று

கூறினார்கள். மேலும் ஊராட்சித் தலைவர் விஜயராணி மீது பல்வேறு புகார் மனுக்கள் வந்துள்ளது. இது தொடர்பாக ஒரு சில மனுவின் மீது விசாரணை செய்து வருகிறோம். சிலர் வேண்டுமென்றே தொடர்ந்து பொய் புகார் மனுக்களை அனுப்பி வருகிறார்கள். அதேபோல் ஊராட்சித்தலைவர் அலுவலகத்தை முறையாக பயன்படுத்துவதற்கும் ஊராட்சித் தலைவர் சுதந்திரமாக இடையூறின்றி செயல்படவும் முழு ஒத்துழைப்பும் பாதுகாப்பும் கொடுப்போம் என்று கூறினார்கள். கிண்ணிமங்கலம் கிராமத்தை சேர்ந்த பரணித்தேவர் மற்றும் சிலர் ஊராட்சித்தலைவர் மீது கொடுத்த புகார் மனு அடிப்படையில் அவர்மீது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 நடைமுறையில் உள்ளது என்றும் கூறினர்.

### செக்காணூரணி காவல்நிலைய ஆய்வாளர் சுகமார்

கடந்த 26.08.2013 அன்று கிண்ணிமங்கலத்தில் ஊராட்சித் தலைவர் மீது நடத்தப்பட்ட தீண்டாமை பிரச்சனை மற்றும் அலுவலகத்தில் அமர்ந்து செயல்பட விடாமல் தடுத்தது குறித்து பரணித்தேவர் மீது போடப்பட்ட வழக்கின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விசாரித்தபோது உசிலம்பட்டி DSP அவர்கள் விசாரித்து வருகிறார். FIR மற்றும் அனைத்து ஆவணங்களும் அவரிடம் தான் உள்ளது. குற்றவாளிகள் அனைவரும் எண் பிரகாரம்: 352/13 u/s 147, 294, (b) 427, 506(1) IPC r/w 3(1) (x) of SC/ST Act பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

### கிண்ணிமங்கலம் கிராமத்தில் பணிபுரியும் மின்சாரவாரிய ஊழியர் கோவிந்தராஜ்

இக்கிராமத்தில் தெருவிளக்குகள் அடிக்கடி பழுதடைவது உண்மைதான். இதை யாரோ திட்டமிட்டுத்தான் செய்கிறார்கள். இதன் காரணமாக இந்த இடத்தில் அடிக்கடி மின்சாரம் இல்லாமல் உள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். எங்கள் அதிகாரிகள் தொடர்ந்து வேலை கொடுக்கிறார்கள். எனக்கு தொடர்ந்து செய்த வேலையையே திரும்ப திரும்ப செய்யும் நிலை உருவாகியுள்ளது. எனவே, சம்பவம் தொடர்பாக இரு பிரிவினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனையை முடித்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

### கிண்ணிமங்கலம் ஊராட்சித் துணைத் தலைவர் பூவரசம்பட்டியை சேர்ந்த சிவன்

ஊராட்சித் தலைவர் விஜயராணிக்கு எதிராக கள்ளர் ஜாதியை சேர்ந்த பரணித்தேவர் குழுவினரும் மற்றும் தலித் இனத்தவர்கள் சிலரும் சேர்ந்துதான் அடிக்கடி புகார் மனு அனுப்பினார்கள். முதலமைச்சரின் ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் பரணித்தேவர் குழுவினர் பரிந்துரை செய்த நபர்களுக்கு ஆடுகள் வழங்கப்படவில்லை. ஆனால், அவர்கள் அனைவரும் ஏழைகள்தான். மேலும் தகுதியான அவர்களுக்கு ஆடுகள் வழங்காமல் வசதிபடைத்தவர்கள் சிலருக்கு ஆடுகள் வழங்கப்பட்டது இருப்பினும் 26.08.2013 அன்று நடைபெற்ற சம்பவத்தில் தொடர்புடைய SCக்களை மட்டும் விட்டுவிட்டு கள்ளர் சாதியைச் சேர்ந்த 5 நபர்கள் மீது மட்டும் புகார் கொடுத்திருப்பது ஊராட்சித் தலைவர்கள் ஒரு தலைபட்சமாக செயல்படுகிறார் என்பது தெரியவருகிறது என்று கூறினார்.

மதுமதி, *AD Panchayat*, அவர்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் சந்தித்து பேசியதில் கிண்ணிமங்கலம் ஊராட்சித் தலைவர் மீது ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 நடைமுறையில் உள்ளது. இது தொடர்பாக விளக்கம் கேட்கப்பட்டுள்ளது என்று கூறினார். அப்போது உடனிருந்த Deputy BDO கருணாகரன் அவர்கள் தலைவர் பதில் கொடுத்திருப்பதாக கூறினார். அதற்கு AD பஞ்சாயத்து அவர்கள் பதிலை படித்து பார்த்து அதன்பிறகு என்ன நடவடிக்கை என்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று கூறியதுடன் 26.08.2013 அன்று கிண்ணிமங்கலத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து SP நடவடிக்கை எடுத்து வருகிறார். இது குறித்து வேறு தகவல் எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார். ஆடு வழங்கும் திட்டத்தில் முறைகேடு செய்துள்ளார். எனவே இரண்டு நபர்களுக்கு வழங்கிய ஆடுகளின் மதிப்பினை இரண்டு பங்காக திருப்பி செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளேன் என்று கூறினார்.

சரவணக்குமார், *DSP*, உசிலம்பட்டி அவர்கள் வெளியூர் சென்றுவிட்ட காரணத்தால் சந்திக்க முடியவில்லை.

### உண்மையறியும் குழுவின் ஆய்வு முடிவுகள்:

1. கிண்ணிமங்கலம் ஊராட்சியில் பறையர் இனத்தவர் அதிகம் வசித்தாலும், குறைந்த அளவில் உள்ள பிறமலைக்கள்ளர்களின் ஆதிக்கம் தான் நிலவிவருகிறது. எனவே தலித்கள் கிராமத்திற்குள் செருப்பு அணிந்து செல்லமுடியாது. டீக்கடைகளில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. பள்ளிகளில் மாணவர்களின் பெயர்களை வருகைபதிவேட்டில் சாதிவாரியாக பிரித்து எழுதி அதில் உள்ளவாறே வகுப்புகளில் பிரித்து உட்கார வைக்கப்படுகிறார்கள். இதுபோன்று பல தீண்டாமை கொடுமைகள் இருந்தாலும், இதுகுறித்து யாராவது கேள்விகேட்கும் பட்சத்தில் கிராமத்தில் முக்கியமான கோவில் உள்ளது. எனவே அந்த வழியாக தலித்துகள் யாரும் செருப்பு அணிந்து செல்வதில்லை. டீக்கடைகளில் ஒருமுறை பயன்படுத்தும் டம்ளர்கள் மட்டுமே பயன்படுத்தப்

படுகிறது. பள்ளிகளில் மாணவர்களுக்கு சலுகை பெற்றுத்தர எளிதாக இருப்பதற்காக சாதிவாரியாக பிரித்து வருகை பதிவேட்டில் பதிந்துள்ளோம் என்று கிராமத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் காரணம் கூறுகிறார்கள். ஆனால் மற்ற சாதியினர் கோவிலின் முன்புறம் செருப்பு அணிந்துதான் செல்கின்றனர். டீக்கடையில் மற்ற இனத்தவர்களுக்கு எவர்சில்வர் டம்ளர்களிலும், தலித்களுக்கு ஒருமுறை பயன்படுத்தும் டம்ளர்களிலும் தான் டீ வழங்குகிறார்கள் என்பது உண்மை.

2. கிண்ணிமங்கலம் ஊராட்சியில் தலித்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தாலும் பிரமலைக்கள்ளர் ஜாதியினரின் ஆதிக்கம் தான் உள்ளது.

3. ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மற்றும் கிராம சபை கூட்டத்தின் போது அதிகாரிகள் மற்றும் காவல்துறை பாதுகாப்பு இல்லாமல் தலைவர் விஜயராணி நாற்காலியில் அமரமுடியாது.

4. கிராமசபை கூட்டம் காவல்துறை பாதுகாப்புடன் தான் நடத்தப்படுகிறது.

5. ஊராட்சி மன்ற அலுவலகம் பயன்படுத்த முடியாத நிலையில் கதவுகள் உடைக்கப்பட்டு அலுவலகத்தை சுற்றி சிறுநீர் கழித்தும், குப்பைகள் கொட்டப்பட்டும், சுகாதாரமற்று உள்ளதுடன் கால்நடைகள் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மது அருந்தும் இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

6. ஊராட்சி மன்றத் தலைவர் விஜயராணி தலைவராக தேர்வு செய்யப்பட்டாலும் கிராமத்தில் உள்ள பிரமலைக்கள்ளர் ஜாதியை சேர்ந்த பரணித்தேவர், 2.வாத்துக்கார மணி, 3.மணித்தேவர், 4.காசி, 5.ராசுத்தேவர், 6.அய்யாவுத்தேவர் ஆகியோரின் பினாமியாக செயல்படுவோர் என்று நினைத்திருந்த நிலையில் அவர் யாருக்கும் அடிமையில்லாமல் சுதந்திரமாக செயல்பட்டதால்அவரை செயல்படாமல் தடுக்க பல்வேறு இடையூறுகளை செய்து வருகின்றனர், குறிப்பாக புகார் மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புவது தகவல் உரிமை சட்டத்தை பயன்படுத்தி தகவல்கள் கேட்டு தலைவரை மிரட்டுவது தாங்கள் சிபாரிசு செய்பவர்களுக்கு பசுமைவீடு, கால்நடை திட்டங்கள் செய்ய வேண்டுமென கூறுவது வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தினால் கமிசன் கேட்பது கொடுக்கவில்லை என்றால் தகராறு செய்வது, குடித்துவிட்டு அடிக்க வருவது ஜாதியை சொல்லி திட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

7. தனக்கு இடையூறு செய்பவர்கள் குறித்து ஊராட்சித் தலைவர் BDO மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளாட்சித்துறை அதிகாரிகளிடம் புகார் கொடுத்தாலும் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம்செய்துதான் அனுப்புகிறார்கள். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. அதற்கு பதிலாக எதிர்தரப்பினர் கொடுத்த புகாரின் பேரில் ஊராட்சி தலைவர் மீது நடவடிக்கை எடுத்து தமிழக ஊராட்சிகள் சட்டப்பிரிவு 205 நிலுவையில் உள்ளது. மேலும் ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ஆடுகள் வழங்கப்பட்ட நிலையில் பயனாளிகள் தேர்வு செய்ததில் முறைகேடு உள்ளதாக கூறி 2 பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆடுகளின் மதிப்பைக் காட்டிலும் 2மடங்கு தொகை தலைவர் திரும்ப செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது.

8. கிண்ணிமங்கலம் ஊராட்சி பள்ளியில், நடைமுறையிலிருக்கும் ஜாதியப் பாகுபாடின்றி மணவர்கள் அர வைப்பது ஒரே நோக்கத்துடன் கல்வி பொதுவுடைமை என்கின்ற பார்வை ஆசிரியரை செயல்பட வைப்பது மாவட்ட ஆசிட்சிர் கண்கானிக்க வேண்டும். ஜாதியை சொல்லி திட்டியும், ஆடு வழங்கும் திட்டத்தில் தங்களுக்கு வேண்டியவர்களை பயனாளிகளாக தேர்வு செய்ய வேண்டும் என்று மிரட்டியும் வந்த பரணித்தேவர் குழுவின் மீது 26.08.2013 அன்று வழக்கு பதிவு செய்து அவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் ஜாமீனில் வெளியில் வந்தால் ஊராட்சித் தலைவர் மீது மீண்டும் தாக்குதல் நடைபெறலாம் என்ற நிலை உள்ளது.

9. தீண்டாமை கொடுமைகள் இல்லாமல் தலைவர் சுதந்திரமாக பணியாற்றவும், ஊராட்சி மன்ற அலுவலகம் நூலகமும் மீண்டும் திறக்கப்பட்டு செயல்படவும் வேண்டுமானால் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தலைவருக்கு நிரந்தரமாக காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும்.

### பரிந்துரைகள்:

1. கேரள ஊராட்சிகள் சட்டத்தைப்போன்று தமிழக ஊராட்சிகள் சட்டத்திலும், காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கான அதிகாரம் ஊராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் வருமாறு தமிழக அரசு சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

2. தலித் பஞ்சாயத்து தலைவர்கள் பிரச்சனை என்பது, சிக்கலானதும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது கிராமப்புற ஏழை மக்களின் அன்றாட தேவைகள்

மற்றும் வளர்ச்சி குறித்ததாகும். இப்பிரச்சனை குறித்து ஆய்வினை உடனே செய்து, அதன் மீதான நடவடிக்கையினை துரிதப்படுத்தவேண்டும். நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை பயன்படுத்தி தலித் ஊராட்சித் தலைவர்களை பாதுகாப்பதுடன், மாவட்ட மற்றும் மாநில நிர்வாகம் இப்பிரச்சனையில் தலையிட்டு தலித் மற்றும் ஒடுக்கமுறை மற்றும் வன்முறை அற்ற அரசியல் தளத்தை உருவாக்க வேண்டும்.

3. மதுரை மாவட்டத்தில் உள்ள தலித் பஞ்சாயத்து தலைவர்களின் உரிமைகளை மீட்டிடவும், அவர்கள் மீதான வன்கொடுமையினை தடுத்திடவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. தலித் பஞ்சாயத்து தலைவர்களின் சுதந்திரமான செயல்பாட்டிற்கு எதிராக அச்சுறுத்தல் உள்ள ஊராட்சி கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர் நேரடியாக பங்கேற்க வேண்டும். இது மூலம் தலித் பஞ்சாயத்து தலைவர்களிடம் தன்னம்பிக்கை வளர்ப்பதுடன், உள்ளாட்சி அரசமைப்பு மீது தலித் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

5. தலித் மற்றும் பெண் பஞ்சாயத்து தலைவர்கள் ஊராட்சி அலுவலகத்திற்குள் செல்ல தடை செய்வது, தலைவர் நாற்காலியில் அமர தடுப்பது, மற்றும் ஊராட்சி ஆவணங்கள் கையாள தடுப்பது உள்ளிட்ட செய்கைகளை புரியும் நபர்கள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

6. மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் நிதி குறித்த அனைத்து விவரங்களையும் தலித் ஊராட்சித் தலைவர்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர், துணை இயக்குநர் ஊராட்சிகள் ஆகியோர் தலித் தலைவர்களுக்கு விளக்க வேண்டும்.

7. ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை வழங்கிட வகை செய்யும் அரசியல் அமைப்பு சட்டம் 11 வது அட்டவனை பிரிவு 243 (அ) படி தமிழ் நாடு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**– ஆய்வு மற்றும் அறிக்கை தொகுப்பு:**
**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) & ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD)**

## ஊராட்சிகளில் உள்ளூர் திட்ட குழு: கட்டட அத்துமீறல்களை தடுக்க அதிரடி

நீலகிரி மாவட்டத்தில், ஊராட்சிகளில், முதன் முறையாக, உள்ளூர் திட்டக்குழு அமைக்கப்பட உள்ளது.

### உள்ளாட்சி அமைப்புக்கு அதிகாரம்

நீலகிரி மாவட்டத்தில், கட்டடங்கள் கட்ட, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் 1500 சதுர அடிக்குள், கட்டடங்கள் கட்ட, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதி வழங்க முடியும். அதற்கு மேல் கட்டடங்கள் கட்ட, வனத்துறை, புவியியல் துறையின் தடையில்லா சான்றை பெற வேண்டும். இதற்கு காலதாமதம் ஆவதால், உரிய அனுமதி இல்லாமல், பல இடங்களில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. ஊராட்சி, பேரூராட்சிகளில், கட்டட அனுமதி வழங்கும் விவகாரம், முழுக்க முழுக்க தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்களிடம் உள்ளது. மன்ற கட்டட அனுமதி வழங்கி விடுவின்றனர். இவ்வாறு, ஊராட்சி, பேரூராட்சி பகுதிகளில், கான்கிரீட் வீடுகள் அதிகரிப்பதை தடுக்க, மாநிலத்தில், முதல் முயற்சியாக, மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ளூர் திட்ட குழு அமைத்து, அக்குழு மூலம் கட்டட அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஊட்டி நகரை சுற்றியுள்ள, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படும் உள்ளூர் திட்டக் குழுவுக்குள் கொண்டு வர அனுமதி கேட்டு, அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

### கடிவாளம் போடப்படுமா ?

இதன் மூலம், ஊராட்சி, பேரூராட்சிகளில் கட்டடம் கட்ட, மாவட்ட ஆட்சியரின் அனுமதியை பெற வேண்டும்; இது, விதி மீறல்களுக்கு கடிவாளம் போடும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரியில், 1993ல் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, மாஸ்டர் பிளான் சட்டத்தை கொண்டு வந்தார். அதன்படி, 7 மீட்டர் உயரத்துக்கு மேல் கட்டடங்கள் கட்டக் கூடாது என்பது போன்ற பல விதிமுறைகள் வகுக்கப்பட்டன. இருப்பினும், மாஸ்டர் பிளான் விதியை மீறி, நகராட்சிப் பகுதிகளில் ஏராளமான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஊட்டி, குன்னூர் நகராட்சிகளில், கட்டட அனுமதி வழங்கும் உள்ளூர் திட்டக் குழுவில், அனைத்து கவுன்சிலர்களும் உறுப்பினர்கள் என்பதால், விதிமீறல், ஆக்கிரமிப்பை கண்டு கொள்ளாமல் உள்ளனர். எனவே, நகராட்சிகளில் செயல்படும் உள்ளூர் திட்டக் குழுவையும், மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசு ஆலோசித்து வருகிறது.

**ஆதாரம்: தினகரன், 31.8.2013**

# வங்கத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள்: அரசியல், ஆணாதிக்கம், வெறுப்பின் கதை

– நிருபம் ஹஸ்ரா

மேற்கு வங்கத்தில் 2012ம் ஆண்டின் பெண்களுக்கு எதிரான 30,942 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன என்று தேசிய குற்றப் பதிவு நிறுவனம் (என்.சி.ஆர்.பி.) தெரிவிக்கிறது. இது நாட்டிலேயே மிக அதிகமான பதிவாகும். நாடு முழுவதிலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள மொத்த குற்றங்களில் 12.67 சதவீதம் வங்கத்தில் நடந்துள்ளன. 2வது ஆண்டாக, பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத மாநிலம் என்ற பெயரை வங்கம் பெற்றுள்ளது. பண்பாட்டுத் துடிப்புக்கும், முற்போக்கான அறிவுத் தளத்திற்கும் பெயர் பெற்ற ஒரு மாநிலத்திற்கு, உணர்ச்சிப் பிழம்பான ஒரு பெண் முதலமைச்சரின் தலைமையில் இருக்கிற ஒரு மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்தான் என்ன ?

2011ல் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்தே, மாநிலத்தில் என்ன தவறு நடந்தாலும் – அது விவசாயிகளின் தற்கொலைகளானாலும் சரி, அண்மையில் நடந்த பாலியல் வன்கொடுமைகளானாலும் சரி – அதற்கெல்லாம் காரணம் பிரதான எதிர்கட்சியாகிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அல்லது மாவோயிஸ்டுகளின் சதி என்றுதான் சித்தரிக்கப்படுகிறது. ஆனால், இன்று இந்த மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் புதிய அரசுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த வங்காள சமுதாயத்திற்கும் ஆழமானதொரு நெருக்கடியாக மாறியுள்ளன. நாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே வங்கத்திலும் பெண்களுக்கு எதிரான வன்புணர்ச்சி, இதர வன்முறைகள் உள்ளிட்ட குற்றங்கள் கவலையளிக்கும் வேகத்தில் அதிகரித்துள்ளன. ஆனால், வங்கத்தில் இப்படிப்பட்ட குற்றங்கள் அதிகரித்திருப்பது, நவீன வாழ்க்கை முறையை சாடுவது, வணிக வளாகங்கள் (மால்) மீதும், பன்நோக்கு வளாகங்கள் (மல்ட்டிப்ளக்ஸ்) மீதும், புலம் பெயர்ந்து வந்தோர் மீதும் பழிபோடுவது என்ற வழக்கமான வசதியான வாதங்களுக்கு அப்பால் செல்கிறது. சமுதாயத்தில் வேறொரு ஆழமான நெருக்கடியைக் சுட்டிக்காடுகிறது.

### பெண் வெறுப்புக் கலாச்சாரம்

நவீன, முற்போக்கான வங்காளி சமுதாயம் தனது அடியாழத்தில் பெண் வெறுப்புக் கலாச்சாரத்தை வளர்த்து வந்திருக்கிறது. அந்தச் சமுதாயத்தின் உயர்வான அறிவார்ந்த தன்மையுடனும் மேம்பட்ட பண்பாட்டு உணர்வுகளுடனும் ஒத்துப்போகவே முடியாத ஒரு அந்நியமான போக்கு இது. வங்கத்தின் ஊரகப் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நிகழ்ந்து வருவது, நீண்டகாலமாகக் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டு வந்துள்ள, பெண்ணுக்கு எதிரான பாகுபாட்டின் வெளிப்பாடாகும். காட்டுமிராண்டித்தனமான வன்முறையோடு இணைந்த பாலியல் குற்றங்கள், பெண்ணின் உடல் மீதான தனது கட்டுப்பாட்டை மறு உறுதி செய்துகொள்வதற்கான வக்கிர ஆணாதிக்க முயற்சியேயாகும். கடந்த இரண்டு மாதங்களில் வெளியான வன்புணர்ச்சிச் செய்திகள் ஒரு விநோதமான ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன. அந்த நிகழ்வுகளில் தாக்குதலுக்கு உள்ளான பெண்கள் அனைவருமே இளம் கல்லூரி மாணவிகள் அல்லது பள்ளி மாணவிகள். குற்றவாளிகளின் அத்துமீறல்களைத் துணிவுடன் ஏற்க மறுத்தவர்கள், எதிர்த்து நின்றவர்கள். அதன் காரணமாக வன்புணர்வுக்கும் வன்மத் தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள், உடல்கள் எங்கோ வீசப்பட்டவர்கள்.

இந்த நிகழ்வுகளை ஒரு விரிவான கண்ணோட்டத்தில் ஆராய்கிறபோது, ஆணாதிக்கத்தை நிலைநாட்டுகிற முயற்சியின் திட்டமிட்ட வன்முறைக்கதை வெளிப்படுகிறது. தாக்கப்படும் பெண்ணின் எதிர்ப்பும் மறுப்பும் குற்றவாளிகளின் ஆண்மைக்குச் செய்யப்படுகிற அவமதிப்பாகவே எப்போதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது; பெண்களின் கல்வித் தேடலும் அதன் பலனாகக் கிடைக்கும் விடுதலையும் ஆளுமையும் சமுதாயத்தைக் கட்டுப்படுத்துகிற, அடிமைப்படுத்துகிற ஆணாதிக்க வழிமுறைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே கருதப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலில் ‘‘காயம்பட்ட’’ ஆண்மைக்கு ஆறுதல் அளிக்கவும் ‘‘அச்சுறுத்தப்படும்’’ ஆணாதிக்கத்துக்குப் பாதுகாப்பு அளிக்கவும் ஒரே வழி வன்புணர்ச்சிதான் என்றாகிறது. ஆனால் கதை இத்தோடு முடிந்துவிடவில்லை.

வங்கத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் – குறிப்பாக வன்புணர்ச்சிக் குற்றங்கள் – ஆணின் தன்னகங்காரம் சார்ந்த, பெண்ணுக்கு எதிரான பாகுபாடு என்பதையும் தாண்டி, ஆணாதிக்கத்தின் அடிமைப்படுத்தும் போக்கு என்பதையும் தாண்டி, ஒரு முக்கிய அம்சத்தைக் காட்டுகின்றன. வங்கத்தில் வன்புணர்ச்சிக் குற்றம் என்பதில் ஒரு அரசியல் முக்கியத்துவமும் இருக்கிறது. வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் மம்தா முதலில் 1993ல் ஈடுபட்டார். ரைட்டர்ஸ் பில்டிங் கட்டடத்தில் முதலமைச்சர் ஜோதிபாசு அறையின் முன்பாக அவர் நடத்திய துணிச்சல் மிக்க, அசாதாரணமான ஆர்ப்பாட்டம் அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கிய

அடையாளமானது. காது கேளாத, வாய் பேச இயலாத ஒரு பெண் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டதை எதிர்த்து அந்தப் ஆர்ப்பாட்டத்தை அவர் நடத்தினார்.

### சிங்கூர் போராட்டம்

2006ல், சிங்கூர் கிராமத்தில் பயிர் நிலங்கள் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த தபாசி மாலிக் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் இடது முன்னணி அரசுக்கு எதிரான ஒரு பெரும் அரசியல் போராட்டத்தைத் தூண்டிவிடுவதாக அமைந்தது. அங்கே டாடா நானோ கார் தொழிற்சாலைக்காக வலுக்கட்டாயமாக நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்து நடந்த இயக்கத்தில் முன்னணியில் நின்றவர் தபாசி. வன்புணர்வுக்கு உள்ளான அவரது உடல் பாதி எரிந்த நிலையில், நானோ தொழிற்சாலை வளாகத்திற்கு அருகில் இருந்த ஒரு குழியில் கிடந்தது (பெண் மீதான வெறுப்பின் மற்றொரு எடுத்துக்காட்டு). எதிர்க்கட்சியினர், அதாவது மம்தா பானர்ஜியின் திருணமூல் காங்கிரஸ் கட்சியினர், குடிமைச் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களுடனும் அறிவுத்தளத்தில் இயங்குவோருடனும் இணைந்து எழுச்சிமிக்க ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆனால், தில்லியில் கும்பல் வன்புணர்ச்சிக் கொடுமையைக் கண்டித்து எழுந்த தன்னெழுச்சியான போராட்டத்தைப் போல அல்லாமல், வங்கத்தில் வன்புணர்வுக் குற்றத்திற்கு எதிரான போராட்டங்கள், குறிப்பாக இன்றைய ஆட்சியில், இங்கொன்றும் அங்கொன்றுமாக தொடர்ச்சியற்றதாகவே நடக்கின்றன. அதற்கு ஒரு முக்கியக் காரணம், குடிமைச் சமூகத்தின் மவுனம். 2011 சட்டமன்றத் தேர்தலின்போது குடிமைச் சமூக இயக்கங்களைச் சேர்ந்தோரும் அறிவுத்தளத்தினரும் மம்தா பானர்ஜிக்கும் அவரது கட்சிக்கும் நிபந்தனையற்ற ஆதரவு அளித்தனர். முன்பு மம்தாவுக்கு உற்சாகத்தோடு ஆதரவளித்த குடிமைச்சமூகவாதிகளில் பெரும்பாலோருக்கு உள்ள சங்கடம் என்னவென்றால், இன்று வெளிப்படையான, நேரடியான விமர்சனத்தில் ஈடுபடுவது அறிஞர் பெருமக்கள் என்ற தங்களது சொந்த நம்பகத்தன்மையின் மீது ஒரு கேள்விக்குறியை வைத்துவிடும் என்பது மட்டுமல்லாமல், தங்களை அரசியல் பகையாளிகளாக்கிவிடுமே என்பதும்தான். ஆகவே குடிமைச் சமூக அமைப்புகளைச் சேர்ந்த பெரும்பாலோர் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கோ கண்டன ஊர்வலம் நடத்துவதற்கோ தயங்குகிறார்கள். வங்கத்தின் அரசியல் களம் கூர்மையாகப் பிளவுபட்டிருக்கும் நிலையில் ஏதேனும் ஒரு கொடூரமான பாலியல் கொடுமைக்கு எதிரான தன்னெழுச்சியான போராட்டம் கூட ஒரு அரசியல் ரீதியான கண்டனமாகிவிடுகிறது. இது வங்காளத்தின் அறிவுத்தளத்தினரது குழப்பம் மட்டுமல்ல, பொதுமக்களின் குழப்பமுமாகும். இந்த மாநிலத்தில், குறிப்பாக உள்ளாட்சித் தேர்தல்களுக்கு முன்பாக, ஒவ்வொரு போராட்டத்திற்கும் ஒரு அரசியல் உள்ளடக்கம் அமையக்கூடிய சூழல் இருந்தது. ஆகவே, வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு எதிர்ப்பு என்பது ஒருவர் அந்த எதிர்ப்பின் நோக்கத்தோடு தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார் என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை; மாறாக, அவரது அரசியல் சார்பும் கூட்டும் என்ன என்பதை உருவகப்படுத்திக் கொள்கிறார் என்ற நிலைமை தவிர்க்கவியலாததாக உருவாகியுள்ளது.

வங்கத்தின் அரசியலில் உருவாகியுள்ள மற்றொரு நெருக்கடியையும் இது காட்டுகிறது. ஜனநாயகரீதியான எதிர்ப்பு இயக்கங்களுக்கான வெளி அங்கே சுருங்கி வருகிறது. எதிர்ப்புகள் ஒடுக்கப்படுவது புதிதல்ல என்ற போதிலும், அண்மைக்கால நிகழ்வுகள் இந்த அழுகல் எந்த அளவுக்கு ஆழமாகப் பரவியிருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. ஒரு அரசியல் நையாண்டி ஓவியம் அல்லது தனது சொந்த உரிமைக்கான கோரிக்கை சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தள்ளிவிடும் என்பதை இந்த மாநிலம் ஏற்கெனவே சந்தித்துவிட்டது. அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான ஜனநாயக உரிமை குற்றச்செயலாக்கப்பட்டுவிட்டது.

இன்று மாநிலத்தில் எந்தக் குற்றம் நடந்தாலும் அதற்குக் காரணம் மார்க்சிஸ்ட் கட்சியின் சதிகள்தான், எல்லாப் போராட்டங்களும் நக்சலைட் பிரச்சாரத்தால் தூண்டிவிடப்பட்டவைதான் என்று சித்தரிக்கப்படுகிறது. காம்துனி கிராமத்தில் வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு பலியானவரின் குடும்பத்தினரைச் சந்திக்க மம்தா பானர்ஜி வந்தபோது கூட, ஆவேசத்தோடு கூடியிருந்த மக்கள் முன்னால் அவர் குற்றவாளிகள் அனைவரும் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள் என்று அறிவித்தார். அது மட்டுமல்ல, நீதி கோரி கோபத்தோடு திரண்டிருந்த மக்களிடையே நக்சலைட்டுகள் கலந்திருப்பதாகவும் அவர் கை காட்டினார். முன்னதாக, அவரது அமைச்சர்களில் ஒருவர் அந்தப் பெண்ணின் குடும்பத்தை வாயடைக்கச் செய்யும் முயற்சியாக, அரசாங்க வேலை அளிக்கப்படும் என்று அறிவித்தார். குடும்பத்தினர் அந்தச் சலுகையை ஏற்க மறுத்துவிட்டனர். இப்படி குற்றச்செயல்களுக்கு அரசியல் முலாம் பூசுவதும், அவற்றை மூடி மறைக்க அல்லது கண்டுகொள்ளாமல் விட முயல்வதும் குற்றவாளிகளுக்கு ஊக்கம் அளித்துள்ளது. விரைவாக நீதி கிடைக்க உதவுவதற்கு மாறாக, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றத்தை அரங்கேற்றியவர்கள் இரு தரப்பாரின் அரசியல் சார்பு என்ன என்பதைத் தீர்மானிப்பதில்தான் மாநில அரசு கவனம் செலுத்துகிறது.

ஆனால், வன்புணர்ச்சி நிகழ்வுகளை அரசு இந்த விதத்தில் மட்டும்தான் கையாளுகிறது என்று சொல்வதற்கில்லை. சென்ற ஆண்டு பிப்வரியில் கொல்கத்தாவின் பார்க் தெருவில் ஓடும் காரில் ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண்

துப்பாக்கி முனையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். அது தொடர்பாக அரசாங்கத் தரப்பிலிருந்து வந்த முதல் எதிர்வினை அப்படி எதுவும் நடக்கவில்லை என்ற மறுப்புதான். தனது அரசின் மீது களங்கம் சுமத்துவதற்காகப் புனையப்பட்ட கட்டுக்கதை என்றார் முதலமைச்சர் மம்தா. அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் – அவர் ஒரு பெண் – ஒரு படி மேலே சென்று, அது “ஒரு பெண்ணுக்கும் அவளது வாடிக்கையாளருக்கும்” இடையே ஏற்பட்ட ஒரு பிரச்சனை என்று கூறினார்; அதன் மூலம் அந்தப் பெண் ஒரு விபச்சாரி என்று முத்திரையிட முயன்றார்.

இவ்வாறு சொன்னதன் மூலம் அந்தப் பெண்ணின் ஒழுக்கத்தைக் கேவலப்படுத்தியது மட்டுமல்லாமல், விபச்சாரி என்றால் வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு உள்ளானவராக மாட்டார் என்ற அர்த்தத்தைக் கொடுக்கவும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் முயன்றார். முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் என அரசியல்வாதிகளாக உள்ள இரண்டு பெண்களிடமிருந்தே இப்படிப்பட்ட சிறுமைப்படுத்துகிற, சிந்தனையற்ற அறிவிப்புகள் வருவது சமுதாயத்தில் எந்த அளவுக்கு ஆணாதிக்க மனநிலை ஊறிப்போயிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அந்த சிந்தனையின்மையும் சகிப்பின்மையும் இத்தோடு நின்றுவிடவில்லை. அந்த வழக்கை விசாரித்து உண்மையைக் கண்டறிந்த, முதலமைச்சர் சொன்னது தவறு என்று நிரூபித்த காவல்துறை அதிகாரி – அவரும் ஒரு பெண்தான் – உடனடியாக காவலர் பயிற்சிப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை அளிப்பதை விட்டுவிட்டு, அந்தக் காவல்துறை அதிகாரி தனது கடமையைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்.

ஆட்சியாளர்களைப் போலவே, அரசு நிர்வாகமும் கூட இப்படிப்பட்ட மறுப்புத் தெரிவிக்கும் மனநிலையோடுதான் இருக்கிறது. ஆட்சியாளர்களின் நிராகரிப்புக் குரலையே எதிரொலிக்கிறது. மாநில அரசின் முதன்மைச் செயலர், அண்மை நாட்களில் நிகழ்ந்த வன்புணர்ச்சிக் குற்றங்கள் தனிப்பட்ட நிகழ்ச்சிகளே என்று கூறினார். தேசிய குற்றப் பதிவு நிறுவனம் (என்சிஆர்பி) வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தவறானவை என்று மறுப்புத் தெரிவித்த மாநில காவல்துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) மற்ற மாநிலங்களை விடவும் வங்காளம்தான் பாதுகாப்பான மாநிலம் என்று கூறினார். மாநில மகளிர் ஆணையமோ, முன்னெப்போதையும் விட இப்போது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றார். முன்னெப்போதையும் விட இப்போது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற வெளிப்படையான உண்மையை ஒப்புக்கொள்ளத் தவறினார். உண்மை நிலைமையை ஒப்புக்கொள்ள அரசும் தயாராக இல்லை, அரசு நிர்வாகமும் தயாராக இல்லை. கவலையளிக்கும் உண்மை நிலவரம் என்னவெனில் வங்கத்தில் இன்று எந்தப் பெண்ணும் பாதுகாப்பாக இல்லை.

**ஆதாரம்: 'Mainstream” August 16-22, 2013**

## ஊராட்சிகளில் வருவாய் எவ்வளவு ?

தமிழகத்தில் உள்ள 70 ஊராட்சிகளில் மட்டும் ரூ. ஒரு கோடிக்கு மேல் வருமானம் வருவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்று 293 ஊராட்சிகளில் ரூ.50 லட்சம் முதல் ஒரு கோடி வரையிலும், 2,524 ஊராட்சிகளில் ரூ.20 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரையிலும், 4,563 ஊராட்சிகளில் ரூ.20 லட்சம் வரையிலும், 2,351 ஊராட்சிகளில் ரூ. 7 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலும், 1,455 ஊராட்சிகளில் ரூ.5 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரையிலும்,

1,268 ஊராட்சிகளில் ரூ.3 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரையிலும் நிதி ஆதாரம் உள்ளது. தமிழகத்தில் 212 ஊராட்சிகளில் 25 ஆயிரம் கிராமங்களும், 637 ஊராட்சிகளில் 16 முதல் 25 கிராமங்களும், 5,434 ஊராட்சிகளில் 5 முதல் 15 கிராமங்களும், 6,241 ஊராட்சிகளில் 5 கிராமங்களும் உள்ளன.

**பணம் வசூலிப்பு**

டேங்க் ஆபரேட்டர்களுக்கு, துப்புரவு பணியாளர்களுக்கு குறைந்த ஊதியம் என்பதால் வீடுதோறும் அவர்கள் பணம் வசூலிக்கின்றனர். மேலும், சிலர், இந்த பணிகளோடு, கூலி வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். சம்பளம் மட்டுமே குறைவு தவிர வேலை என்பது கணக்கில்லாமல் உள்ளது. அதிகாலை 3 மணிக்கு சென்று தொட்டியில் குடிநீரை ஏற்ற சுமார் 8 மணி முதல் 10 மணி நேரமாகுகிறது. பின்னர் ஒவ்வொரு பகுதிகளுக்கும் குடிநீர் சப்ளை செய்ய வேண்டியதுள்ளது. தொடர் வேலையால் ஆபரேட்டர்கள் அல்லல்படுகின்றனர்.

தமிழகத்தில் உள்ளாட்சி துறையில் பகுதி நேர ஊழியர்களாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். ஆனால், ஆந்திரா, கர்நாடகா, கேரளாவில் 50 சதவீத ஊராட்சிகளில் அனைத்து ஊழியர் களும் பணிநிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியம் பெறுகின்றனர்.

**– ஆதாரம்: தினகரன், 10.9.2013**

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊராட்சிகளில் நீர்நிலை மற்றும் பொது இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கை

**அனுப்புநர்:**
திரு.க. இரவிச்சந்திரன்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)
மதுராந்தகம்

**பெறுநர்,**
அனைத்து ஊராட்சிமன்றத் தலைவர்கள்,
மதுராந்தகம் ஒன்றியம்,

**ந.க.எண்.1961/2011/அ3 நாள்: 27.7.2012**

**அய்யா / அம்மையீர்!**

**பொருள்:** ஆக்ரமனம் – மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் – ஊராட்சிகளில் நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் – நடவடிக்கை எடுத்தல் – தொடர்பாக

**பார்வை...** 1) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற திட்ட நடவடிக்கை கூட்ட குறிப்பு
2) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2279/2009/அ5 நாள்...31.01.2012, 16.03.2012, 14.07.2012 மற்றும் 24.07.2012.

------------

பார்வையில் கண்டுள்ள கடிதங்களின்படி, நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக 22.8.2011 அன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த குழு கூட்டத்தில் தெரிவித்தபடி, தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமனம் அகற்ற வட்டாட்சியரின் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான நோட்டீஸ் மாதிரி இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக சிவில் அப்பீல் எண்.1132/2011 மற்றும் SLP (C) No. 3109/2011, 28.01.2013 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில் ஆக்கிரமனங்களை அகற்றுதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் இப்பொருள் குறித்து சிறப்பு கவனம் மேற்கொண்டு ஆக்கிரமனங்களை அகற்ற இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி நோட்டீஸ்படி ஆக்கிரமனதாரர்களைக் கண்டறிந்து நோட்டீஸ் அனுப்பி, ஆக்கிரமனதாரர்களுக்கு அவகாசம் அளிப்பது / விசாரணைக்கு அழைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆக்கரமனங்களை அகற்றிட தெரிவிக்கப்படுகிறது.

ஆக்கிரமனம் அகற்றப்பட்ட விவரத்தினை ஒவ்வொரு மாதமும் எவ்வளவு ஹெக்டேர் அகற்றப்பட்டது. எத்தனை நபரிடமிருந்து மீட்கப்பட்டது போன்ற விவரங்களை பிரதிமாதம் 30ம் தேதியன்று அறிக்கை அளிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

உச்சநீதிமன்ற தீர்ப்பாணை கவனத்தில் கொண்டு சிறப்பு நடவடிக்கை எடுக்கத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு... நோட்டீஸ்

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)
மதுராந்தகம்

# உச்சநீதிமன்ற உத்தரவு எண்.S.L.P.(L) 3109/2011/ நாள் 28.1.2011ன் படி நோட்டீஸ்

**காஞ்சிபுரம் மாவட்டம்**

கிராமம் மேற்படி முகவரில் வசிக்கும் நீவிர் அடியிற்கண்ட ஷெட்யூலில் குறிப்பிடுகிற அரசு சொத்தாகிய நிலத்தை நீவிர் அனுமதியின்றி அனுபவத்தில் வைத்துக்கொண்டிருப்பதாக தெரிய வருகிறபடியால்

கீழ்கண்ட பிரகாரம் நிலத்தை அனுபவத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக உம்மை மேற்படி நிலத்தை விட்டு அப்புறப்படுத்துவதற்காக உம்மை மேற்படி நிலத்தை விட்டு அப்புறப்படுத்துவதற்குள்ளாக்கி மகசூல் விளைபொருள் கட்டிடம் கட்டுக்கோப்பு மேற்படி நிலத்தின் மேல் சேர்த்து வைத்திருக்கும் வஸ்துக்கள் ஆகிய இவைகளை ஏன் பறிமுதல் செய்யக்கூடாதென்பதற்காக காரணம் காட்ட நீர் விருப்பப்படுகிறபட்சத்தில் 2011ம் ஆண்டு மாதம் தேதிக்குள்ளே என் முன்னிலையில் நேராகவோ அல்லது எழுத்து மூலமாகவாவது மேலே கண்டபடி காரணங்காட்டலாமென்று இதன் மூலமாக உமக்கு நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது.

### ஷெட்யூல்

| கிராமம் | சர்வே நம்பரும் உட்பிரிவும் | நிலத்தைப் பற்றிய விவரம் | முழு விஸ்தீரணம் (ஹெக்டேரில்) | அனுபத்திலிக்கிற விஸ்தீர்ணம் (ஹெக்டேரில்) | (நிலம்) என்னவிதமான அனுபத்திலிருக்கிறதென்பது |
|---|---|---|---|---|---|

சம்பந்தப்பட்ட அலுவலர்

### ஆய்வுரை

<u>வ.எண். 1568/2007/எண்.1</u> <u>நாள்: 30.7.2011</u>

### <u>சிவில் அப்பீல் எண்.1132/2011 மற்றும் SLP (C) No. 3109/2011, திரு. ஜக்பால்சிங் மற்றும் சிலர் டில்லி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின்பேரில், 28.1.2011 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது பற்றி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திட்ட நடவடிக்கை கூட்ட குறிப்பு</u>

********

நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக, சிவில் அப்பீல் எண். 1132/2011 மற்றும் SLP (C) No. 3109/2011, திரு. ஜக்பால்சிங் மற்றும் சிலர் டில்லி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின்பேரில், 28.1.2011 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது தொடர்பாக, மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் அறிவுரை வழங்கப்பட்டதற்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் திட்ட நடவடிக்கை அறிவுரைக் கூட்டம் 27.7.2011 அன்று பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்காணும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1. வருவாய் கோட்ட அலுவலர், காஞ்சிபுரம்
2. வருவாய் கோட்ட அலுவலர், மதுராந்தகம்
3. வருவாய் கோட்ட அலுவலர், தாம்பரம்
4. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, காஞ்சிபுரம்

5. உதவி இயக்குநர், (ஊராட்சி), காஞ்சிபுரம்
6. வட்டாட்சியர், திருப்பெரும்புதூர்
7. வட்டாட்சியர், தாம்பரம்
8. வட்டாட்சியர், சோழிங்கநல்லூர்
9. வட்டாட்சியர், மதுராந்தகம்
10. வட்டாட்சியர், செய்யூர்
11. வட்டாட்சியர், ஆலந்தூர்
12. வட்டாட்சியர், காஞ்சிபுரம்
13. வட்டாட்சியர், திருக்கழுக்குன்றம்
14. வட்டாட்சியர், செங்கல்பட்டு
15. வட்டாட்சியர், உத்திரமேரூர்
16. மண்டல துணை வட்டாட்சியர், கூடுவாஞ்சேரி
17. மண்டல துணை வட்டாட்சியர், குன்றத்தூர்,
18. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம்
19. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி)
20. வட்டார வளர்ச்சி அலுவலர், புனித தோமையார்மலை (வட்டார வளர்ச்சி)
21. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), புனித தோமையார்மலை
22. வட்டார வளர்ச்சி அலுவலர், இலத்தூர் பவுஞ்ஞர் (வட்டார வளர்ச்சி),
23. வட்டார வளர்ச்சி அலுவலர், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் (கிராம ஊராட்சி),
24. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி),
25. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி), குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
26. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
27. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), காஞ்சிபுரம்
28. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி), காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்
29. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), திருப்பெரும்புதூர்
30. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), வாலாஜாபாத்
31. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி), வாலாஜாபாத்
32. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி), காட்டாங்கொளத்தூர்
33. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), காட்டாங்கொளத்தூர்
34. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), திருக்கழுக்குன்றம்
35. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), மதுராந்தகம்
36. வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), அச்சிறுப்பாக்கம்
37. வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊராட்சி), மதுராந்தகம்
38. மேலாளர், வனத்துறை
39. செயல் அலுவலர் (நிர்வாகம்) பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம் காஞ்சிபுரம் மாவட்டம்
40. செயல் அலுவலர், திருப்போரூர் பேரூராட்சி
41. செயல் அலுவலர், வாலாஜாபாத் பேரூராட்சி
42. செயல் அலுவலர், கூடுவாஞ்சேரி டவுன் பஞ்சாயத்து
43. செயல் அலுவலர், கருங்குழி டவுன் பஞ்சாயத்து
44. செயல் அலுவலர், அச்சரப்பாக்கம் டவுன் பஞ்சாயத்து
45. செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி
46. செயல் அலுவலர், செவிலிமேடு பேரூராட்சி
47. செயல் அலுவலர், இடைக்கழிநாடு பேரூராட்சி
48. செயல் அலுவலர், நத்தம்பாக்கம் பேரூராட்சி
49. துப்புரவு ஆய்வாளர், மாமல்லபுரம் பேரூராட்சி

50. இளநிலை உதவியாளர், பெருங்குடி பேரூராட்சி அலுவலகம்
51. நகரமைப்பு ஆய்வர், ஆலந்தூர் நகராட்சி
52. நகரமைப்பு ஆய்வர், ஆலந்தூர் நகராட்சி
53. நகரமைப்பு ஆய்வர், பல்லாவரம் நகராட்சி
54. நகரமைப்பு ஆய்வர், தாம்பரம் நகராட்சி (மேற்கு)
55. நகரமைப்பு ஆய்வர், பல்லவபுரம் மற்றும் அனகாப்புத்தூர் நகராட்சி (பொ)
56. நகரமைப்பு ஆய்வர், மதுராந்தகம் நகராட்சி
57. நகரமைப்பு ஆய்வர், செங்கல்பட்டு நகராட்சி
58. நகரமைப்பு ஆய்வர், உள்ளகரம் – புழுதிவாக்கம் நகராட்சி
59. பணி மேற்பார்வையாளர், பம்மல் நகராட்சி
60. இளநிலை உதவியாளர், பீர்க்கன்கரணை பேரூராட்சி
61. இளநிலை உதவியாளர், சோழிங்கநல்லூர் பேரூராட்சி
62. இளநிலை உதவியாளர், பெருங்களத்தூர்
63. இளநிலை உதவியாளர், திருப்பெரும்புதூர் பேரூராட்சி
64. இளநிலை உதவியாளர், திருநீர்மலை பேரூராட்சி
65. இளநிலை உதவியாளர் (பொ), சிட்லப்பாக்கம் பேரூராட்சி
66. இளநிலை உதவியாளர், மாங்காடு பேரூராட்சி
67. இளநிலை உதவியாளர், செம்பாக்கம் பேரூராட்சி
68. இளநிலை உதவியாளர், மீனம்பாக்கம் பேரூராட்சி
69. இளநிலை உதவியாளர், குன்றத்தூர் பேரூராட்சி
70. இளநிலை உதவியாளர், பள்ளிக்கரணை பேரூராட்சி
71. இளநிலை உதவியாளர், உத்திரமேரூர் பேரூராட்சி
72. இளநிலை உதவியாளர், மாடம்பாக்கம் பேரூராட்சி

மேற்படி திட்ட நடவடிக்கை அறிவுரை கூட்டத்தில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக முடிவுகள் எடுக்கப்பட்டன.

❖ காஞ்சிபுரம் மாவட்டம், நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் பொது இடங்களில் வட்டவாரியாக பின்வருமாறு ஆக்கிரமணங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **வட்டத்தின் பெயர்** | **நீர்நிலையில் உள்ள ஆக்கிரமணங்கள் எண்ணிக்கை** | **பொது இடங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|
| காஞ்சிபுரம் | 4740 | 3976 |
| உத்திரமேரூர் | 830 | 1036 |
| திருப்பெரும்புதூர் | 4580 | 8910 |
| தாம்பரம் | 3883 | 4408 |
| ஆலந்தூர் | 6184 | 4314 |
| சோழிங்கநல்லூர் | 5828 | 9719 |
| செங்கல்பட்டு | 3935 | 812 |
| திருக்கழுக்குன்றம் | 1996 | 3204 |
| 3204 | 1168 | 3124 |
| செய்யூர் | 972 | 1682 |
| **மொத்தம்** | **34116** | **41185** |

❖ நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக, சிவில் அப்பீல் எண்.**1132/2011** மற்றும் SLP (C) No. 3109/2011, திரு. ஜக்பால்சிங் மற்றும் சிலர் டில்லி உச்சநீதிமன்றத்தின் வழக்கு தொடுத்ததின்பேரில், **28.1.2011** அன்று உச்சநீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

"all the State Government in the country that they should prepare schemes for eviction of illegal/unauthorized occupants of Gram Sabha / Gram Panchayat / Poramboke / Shamlat land and these must be restored to the Gram sabha / Gram Panchayat for the Common use of villagers of the village. For this purpose the Chief Secretaries all State Government / Union Territories in India are directed to the needful taking the help of other Senior Officers of the Government. The said scheme should provide for the speedy eviction of such illegal occupant. After giving him a show causes notice and a brief hearing. Long duration of such illegal occupation or huge expenditure in making constructions thereon or political connection must not be treated as a justification for condoning this illegal act of for regulating the illegal possession. Regularization should only permitted in exceptional cases e.g. where lease has been granted under some Government notification to land lease labourers or members of Scheduled Castes/Schedule Tribes or where there is already a school, dispensary or other public utility land.

Let a copy of this order be sent to all Chief Secretaries of all States and Union Territories in India who will ensure strict and prompt Compliance of this order and submit compliance reports to this Court from time to time. Although we have dismissed this appeal, it shall be listed before this Court from time to time (on dates fixed by us) so that we can monitor implementation of our directions herein. List again before us 3.5.2011 on which date all Chief Secretaries in India will submit their reports"

❖ மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் அறிவுரை வழங்கப்பட்டதற்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீர்நிலை மற்றும் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக கீழ்குறிப்பிட்ட நாட்களில் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை எவ்வித சுணக்கமும் இன்றி செய்ய வேண்டுமென என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

| வ. எண். | பணி குறித்த விவரம் | கால அளவு | செயல்படுத்தும் அலுவலர் | கண்காணிப்பு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | துறை வாரியான ஆக்கிரமண விவரம் கண்டறிதல் | 1.8.2011 முதல் 15.8.2011 வரை | கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குறுநில அளவர் | மண்டல துணை வட்டாட்சியர் / வட்டாட்சியர் |
| 2. | ஆக்கிரமணதாரர்கள் விவரம் கணக்கெடுத்தல் | 16.8.2011 முதல் 23.8.2011 வரை | கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் தலைமை நில அளவர் | மண்டல துணை வட்டாட்சியர் / வட்டாட்சியர் |
| 3. | ஆய்வு கூட்டம் | 22.8.2011 | மாவட்ட வருவாய் அலுவலர் | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 4. | ஆக்கிரமணதாரர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்படுவது | 23.8.2011 முதல் 7.9.2011 | வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலகங்கள் | வருவாய் கோட்ட அலுவலர் |
| 5. | ஆக்ரமணதாரர்களுக்கு அவகாசம் அளிப்பது / விசாரணைக்கு அழைப்பது | 8.9.2011 முதல் 23.9.2011 | வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலகங்கள் | |
| 6. | அனைத்து துறை அலுவலர்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்படுவது / ஆக்கிரமணங்களை அகற்ற தேதி குறிப்பிடுவது | 24.9.2011 | மாவட்ட வருவாய் அலுவலர் | மாவட்ட ஆட்சித் தலைவர் |
| 7. | ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை எடுப்பது | 25.9.2011 முதல் 24.10.2011 | சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் | வருவாய் கோட்ட அலுவலர் |

❖ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களின் தலைமையில் 22.8.2011 அன்று நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தல் ஆக்கிரமண விவரங்களை முழுமையான அளவில் எவ்வித விடுபாடும் இன்றி கண்டறிந்து சமா்ப்பிக்க வேண்டும் என்றும், ஆக்கிரமணதாரா்களுக்கு நோட்டீஸ் சாா்வு செய்யப்படும்போது உச்சநீதிமன்ற தீா்ப்பினை மேற்கோள் காட்டி சாா்வு செய்யப்பட வேண்டும் என்றும் எவ்வித பாரபட்சமின்றி அனைத்து ஆக்கிரமணங்களையும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நெடுஞ்சாலைத் துறையினா் வருவாய்த்துறையினருடன் கூட்டாக இணைந்து ஆக்கிரமணங்களை கண்டறிந்து ஆக்கிரமணங்களை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நீா்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை கண்டறிந்து ஆக்கிரமணங்களை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நீா்நிலைப்புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பொது நிறுவனங்கள் மற்றும் கல்விக்கூடங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் முழுமையான அளவில் அகற்றப்பட வேண்டும் என்றும், அனைத்து வட்டாட்சியா்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலா்கள் ஆக்கிரமணங்களை எவ்வித விடுபாடும் இன்ற அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அனைத்து வருவாய் கோட்ட அலுவலா்களும் மேற்படி பணியினை கண்காணித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புள்ளி விவர அறிக்கையினை ஒவ்வொரு வார முடிவிலும் சமா்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**(செயல்: அனைத்து உறுப்பினா்கள்)**

ஓம். எஸ். சிவசண்முகராஜா
மாவட்ட ஆட்சித் தலைவா்
காஞ்சிபுரம்

**//ஆணையின்படி//**

கூடுதல் நோ்முக உதவியாளா்

**பெறுநா்**

தொடா்புடைய அலுவலா்கள்,

நகல்

1. முதன்மை செயலா் மற்றும் நில நிா்வாக ஆணையா் நில நிா்வாகத்துறை, சேப்பாக்கம். சென்னை – 600 005. (கடிதம் எண். 14766/2011/பிடி1) –––– மேலான தகவலுக்கு
2. கூடுதல் நோ்முக உதவியாளா், காஞ்சிபுரம்
3. தலைமை உதவியாளா் (பி) மற்றும் (என்) பிரிவு
4. மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களின் முகாம் எழுத்தா்
5. மாவட்ட வருவாய் அலுவலா் அவா்களின் முகாம் எழுத்தா்
6. என்–1, பி1, பி2, பி3 உதவியாளா்கள்

For Private Circulation Only

## பரவலாக்கப்பட்ட ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை நோக்கி......

# ஊராட்சித் தலைவர்கள் சந்தித்த சவால்களின் கதைகள்

தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு
தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு

சார்பாக

வெளியீடு

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா
தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905,
மின்அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com
இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org